Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 16 திங்கட்கிழமை (30.06.2014) பக்கங்கள் 20 ஓசை – 272

# ஐ.நா. விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்குமா கூட்டமைப்பு?



## பதில் கூறாமல் நழுவினார் சம்பந்தன்

(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து விசாரிக்க, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் நியமித்துள்ள விசாரணைக் குழு முன்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாட்சியமளிக்குமா என்பது குறித்து கருத்து வெளியிட மறுத்துள்ளார் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

டெய்லிமிரர் இது தொடர்பாக சம்பந்தனிடம் கேள்வியை எழுப்பியிருந்தது.

அதற்கு, இரா.சம்பந்தன், இந்த விவகாரம் தொடர்பாக எமது கட்சி ஒரு முடிவை எடுக்கும். அதற்கு அப்பால் என்னால் எந்தக் கருத்தையும் கூற முடியாது.

தமிழ் மக்களின் உரிமைகளை நாம் பாதுகாக்க வேண்டியுள்ளது நிச்சயம். இந்த நிலைமையை அரசாங்கமே உருவாக்கியது.

2009 ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்த ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனிடம், பொறுப்புக் கூறும் செயல்முறைக்கு இணங்கியிருந்தது. அதை அவர்கள் பின்பற்றவில்லை.

நம்பகமான உள்நாட்டுப் பொறிமுறையை உருவாக்கவில்லை. உண்மைகள் வெளிக் கொண்டுவரப்படும் வரை, உண்மையான நல்லிணக்கம் சாத்தியமில்லை என்று தெரிவித்துள்ளார்.

## பூசகர் சடலமாக மீட்பு

(புலோலி)

புலோலி முற்றம்பால சிவன் கோவில் பூசகர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

வல்லிபுரம் குறிச்சி பகுதியைச் சேர்ந்த சோதிலிங்கம் சுதாகரன் (வயது-23) என்ற பூசகரே நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சடலம் தொடர்பான விசாரணையினை மேற்கொண்டு வருகின்றதாகவும் பருத்தித்துறை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

## அளுத்கம, பேருவளை சம்பவங்கள் சுதந்திர ஆணைக்குழு மூலம் விசாரணை

### கோரிக்கை விடுக்கிறது முஸ்லிம் காங்கிரஸ்

அளுத்கம மற்றும் வேருவளை சம்பவங்கள் தொடர்பாக உண்மையைக் கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றின் மூலம் விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

அண்மையில் களுத்துறை மாவட்டம், அளுத்கம மற்றும் பேருவளைப் பகுதிகளில் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர்களது சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன.

இச்சம்பவங்களுக்கு கடும்போக்கு பௌத்த அமைப்பு என்று கருதப்படும் பொதுபல சேனாவே காரணம் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இச்சம்பவங்கள் தொடர்பாக பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை நடத்திவந்தாலும், அந்த விசாரணைகள் தொடர்பில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் நம்பிக்கையிழந்துள்ளனர் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளரான எம்.டி.ஹசன் அலி பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.



பொலிஸ் விசாரணைகளின் போது உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களினால் தமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், சுதந்திரமான ஆணை

19 பக்கம் பார்க்க...

## பாகிஸ்தானியருக்கு நுழைவுவிசா இலங்கையில் நிறுத்தப்பட்டது ஏன்?

### விளக்கம் தருகிறது ரைம்ஸ் ஒவ் இந்தியா

பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்கான தளமாக இலங்கையைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கிலேயே, பாகிஸ்தானியர்களுக்கு வழங்கப்பட்ட வருகை நுழைவிசைவு வசதியை இலங்கை நிறுத்தியுள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானின் ஜிகாதி குழுக்கள் இந்தியாவில் தாக்குதல் நடத்துவதற்கான தளமாக இலங்கையைப் பயன்படுத்துவது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சென்னையில் தொடருந்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து, பாகிஸ்தான் ஜிகாதி குழுக்கள், இந்தியாவில் தாக்குதல் நடத்துவதற்கான இடைத்தங்கல் மையமாக இலங்கை மற்றும் மாலைதீவை பயன்படுத்துவது தெரியவந்துள்

19 பக்கம் பார்க்க...

## இலங்கைக்கு உள்ளேயும், வெளியிலும் பௌத்த, முஸ்லிம் தீவிரவாதிகள்



### என்கிறார் ரணில்

இலங்கைக்கு உள்ளேயும் வெளியிலும் சிறிதளவில் பௌத்த மற்றும் முஸ்லிம் தீவிரவாதிகள் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசிய போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கம் மத தீவிரவாதிகளை உருவாக்குவதாக குற்

19 பக்கம் பார்க்க...

## 17 இந்திய மீனவர்கள் தலைமன்னாரில் கைது

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 17 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர். அத்துடன் அவர்கள் பயன்படுத்திய 3 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர். இந்த 17 மீனவர்களும் நேற்று முன்தினமிரவு தலைமன்னார் கடற்பரப்பில் கைதாகினர் இவர்கள் நேற்று மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, இன்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

## இலங்கை வருவதற்கான அனுமதியை கோரவில்லை ஐ.நா. விசாரணைக்குழு

### அரசாங்கம் தெரிவிப்பு

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக்குழு, இலங்கை வருவதற்கு இன்னமும் நுழைவு விசாவை கோரவில்லையென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கோ அல்லது வெளிவிவகார அமைச்சுக்கோ எந்த வேண்டுகோளும் விடுக்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, இந்த விசாரணையை எதிர்க்கும் முடிவில் இருந்து அரசாங்கம் பின்வாங்கவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

19 பக்கம் பார்க்க...

## ஐ.நா.விசாரணைக் குழுவை நிராகரிப்பது கடினமானது

### கூறுகிறார் சொல்ஹெய்ம்

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஐ.நா. விசாரணைக் குழுவை இலங்கை அரசாங்கம் நிராகரிப்பது மிகவும் கடினமானதென நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் பணியகம் நியமித்துள்ள, இலங்கை குறித்த விசாரணைக் குழு, கேட்டுக் கொண்டால், அதன் முன்பாக சாட்சியமளிக்க நான் தயார்.

இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து விசாரிக்க ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் நியமித்துள்ள, விசாரணைக் குழு மிகவும் உயர்ந்த மட்டத்திலானது. உயர் அனுபவத்தையும், மதிப்பையும் கொண்டது.

விசாரணைக்குழு, கேட்டுக் கொண்டால், அதன் முன்பாக சாட்சியமளிக்க நான் செல்வேன். அவர்களை நிராகரிப்பது மிகவும் கடினமானது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

உள்ளே

க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான கணித பாட வினாத்தாள்

# வடமராட்சி தம்பசிட்டிப் பகுதியில் டெங்குத் தாக்கம் அதிகரிப்பு



(பருத்தித்துறை)

வடமராட்சி, தம்பசிட்டி மாயக் கப் பகுதியில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட பலர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இப்பகுதியில் டெங்கு தீவிர மடைந்துள்ளதால் தொடர்ந்தும் புகையூட்டல் நடவடிக்கைகள் மேற கொள்ளப்படுவதுடன் வீடுகள் மற்றும் பற்றைக் காணிகள், வீதியோரங்களிலும் புகையூட்டல் இடம்பெற்று வருகிறது.

சுகாதாரப் பகுதியினரும் டெங்கு தொடர்பில் மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (109)


## FACULTY OF SCIENCE UNIVERSITY OF JAFFNA

General Degree Examination in Science – 2013
Levels 1G, 2G, 3G
Bachelor Degree Examination in Computer Science
Levels -2013 1S, 2S, 3S, 4S
Special Degree Examination in Science – 2013
Levels 3M, 4M

**END OF COURSE EXAMINAION IN FIRST SEMESTER**

End of Course Examinations of the Course Units conducted in the First Semester will commence in August in **August 2014.**

Students who wish to sit for the above End of Course Examination as Repeat Candidates are requested to submit their duly filled Examination Entry Forms along wit receipt of payment for examination fee at the Office of the Dean /Science on or before **14th July 2014**. Examination Entry Forms could be obtained from the Office of the Dean/ Science.

24-06-2014 (C/3719) Registrar


## இரதோற்சவம்

(வடமராட்சி)

புலோலி பசுபதீஸ்வரர் ஆலய வருடாந்த தேர் உற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் மறுநாள் தீர்த் தோற்சவமும், மாலை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (109)

## 'சிந்மயம்' நூல் வெளியீடு

(கரணவாய்)

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் தனது 130 ஆவது ஆண்டை நோக்கி கல்விப்பயணத்தை முன்னெடுக்கும் வகையில் அதனை சிறப்பித்து நூல் ஒன்றை வெளியிடவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் சிந்மயம் எனும் நூலினை பாடசாலை சமூகம் வெளியிடவுள்ளதுடன், இதற்கான ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்துவருகின்றனர்.

## ஸ்ரீ நரசிங்க வைரவர் கும்பாபிஷேகம்.

(கரணவாய்)

அல்வாய் வடமத்தி கம்பளிகாப்பான் இன்பர்சிட்டி திருவருள்மிகு ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று அதிகாலை 5.00 மணிமுதல் 7.00 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. இதில் கும்பாபிஷேக கிரியைகளை உடுப்பிட்டி வடக்கு கொம்மந்தறை ஸ்ரீ மனோன் மணி அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ. பாலகிருஷ்ணக் குருக்கள் ஆற்றவுள்ளார்.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2541 திகதி 28-06-2014

ஆங்கில எழுத்து: H

வெற்றி எண்கள் 21 53 68 69

போனஸ் இல: 15

ஜக்பொட் பரிசு ரூ. 14,002,575/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 208973 | 20/- | 4,179,460/- |
| 2 இல | 14979 | 100/- | 1,497,900/- |
| 3 இல | 307 | 1,000/- | 307,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8232 | 40/- | 329,280/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 622 | 1,000/- | 622,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 18 | 10,000/- | 180,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,002,575/- | - |
| 1 இல + போனஸ் இல | 9958 | 100/- | 995,800/- |
| 2 இல + போனஸ் இல | 466 | 500/- | 233,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 381 | 200/- | 76,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 24 | 1,500/- | 36,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 243966 | | 10,006,640/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.07.02 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 14,571,975/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 தொ.பே: 2333546/7

(C/3700)


# குடும்பநல உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)


யாழ். மாநகர சபை பகுதியிலுள்ள குடும்பநல உத்தியோகத்தர்களது வெற்றிடங்களை நிரப்புவதற்கு யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்திலேயே இதற்கான அனுமதி கோரி ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். மாநகர சபை பகுதிக்கு தேவைப்படும் குடும்பநல உத்தியோகத்தர்களை தெரிவு செய்து அவர்களுக்கு பயிற்சியளித்து யாழ். மாநகர சபையின் பகுதிகளில் நியமனம் செய்வதற்கு இந்தக் கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தற்சமயம் யாழ். மாநகர சபைப் பகுதியில் குடும்பநல உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாகவே இருந்து வருகின்றது.

நியமனமாகும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியளிப்பதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. (பா)



ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரியம்மன் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்ற திருவிழாவில் நேற்று முன்தினம் தேர்த்திருவிழாவும் நேற்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்றது. தேர்த்திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர். காவடிகள், தூக்குக்காவடிகள் எடுத்து தமது நேர்த்திகளை பலர் நிறைவேற்றினர்.

# மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கணவனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை சேலைத் தலைப்பு சக்கரத்தில் சிக்குண்டு விழுந்த பெண் மரணமடைந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் பொன்னாலையில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, தாவடியை வதிவிடமாகவும் உடைய சிவகாமசுந்தரி சுபாரத்தினம் என்பவர் தனது கணவனுடன் சொந்த ஊராகிய காரைநகருக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார்.

பொன்னாலை வெளியில் சென்றுகொண்டிருந்த வேளை பலமான காற்றுக் காரணமாக சேலைத் தலைப்பு சக்கரத்தில் சிக்குண்டதால் வீதியில் வீழ்ந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த பெண் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்ததாகவும், கோமா நிலையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி கடந்த புதன்கிழமை மாலை மரணமடைந்தார். (06)

## கிராமிய வைத்தியசாலையில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் மண்டைதீவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமிய வைத்தியசாலையில் இயங்கிவருகின்றது.

மண்டைதீவு மகா வித்தியாலயத்திற்கு முன்பாக அமைந்திருந்த பொதுநோக்கு மண்டபத்தில் இயங்கிவந்த இந்த ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த வருடம் அங்கு ஏற்பட்ட கடும் காற்றுக் காரணமாக சேதமடைந்து அதன் கூரை தூக்கியெறியப்பட்ட நிலையில் அங்கிருந்து இடம்மாற்றப்பட்டு மண்டைதீவிலுள்ள வேலணை பிரதேச சபையின் உப அலுவலகத்தில் இயங்கிவந்தது.

இதற்கென கட்டடம் ஒன்று இல்லாத நிலையில் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட மண்டைதீவு கிராமிய வைத்தியசாலையின் ஒரு பகுதியில் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிவருகின்றது. (பா)


## சிறுநீரகம் தேவை

B- குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.

தொடர்பு: 0778999994. 0776791028

(R/353)

## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3595)

# புதிய கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்து வைக்க ஏற்பாடு

## – வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் கீழ் ஒவ்வொரு பிரதேசங்களிலுள்ள மாதர்கிராம அபிவிருத்தி சங்கங்களினூடாக புதிய கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

சர்வதேச விதவைகள் தினத்தை முன்னிட்டு வறுமையையும் சமத்துவமின்மையையும் சமூகங்களில் இல்லாதொழித்தல் என்னும் தொனிப்பொருளில் யாழ். விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நடத்திய விசேட ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பெண்களை தலைமைத்துவமாக கொண்ட எத்தனையோ குடும்பங்கள் காணப்படும் இக்கால கட்டத்தில் இவ்வாறு ஒரு நாளை விசேட விழிப்புணர்வூட்டும் ஒரு நாளாக முன்னெடுக்கும் விழுதுகள் அமைப்பினரை பாராட்டுகிறேன். ஒவ்வொரு கிராம மட்டங்களிலும் இருக்கின்ற மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் சிறப்பாக இயங்கும் சமயத்தில் இது போன்ற ஆற்றுப்படுத்தும் நிறுவனங்களுக்கு இன்னமும் உதவியாக இருக்கும். மேலும் கிராம மட்ட அமைப்பான மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களினூடாக தனது அமைச்சின் கீழ் புதிய கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.கிராம மட்ட அமைப்புக்கள் சரியான முறையில் இயங்குவது அவசியமானது என அவர் தெரிவித்தார்.

# தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலைக்கு கழிவகற்றும் வண்டி வழங்கப்பட்டது



தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலையின் பாவனைக்கென வலி.வடக்கு பிரதேச சபையினால் கழிவகற்றும் வண்டி ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டது.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் கடந்த25 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கழிவகற்றல் செயற்பாடு தொடர்பில்ஆராயப்பட்டபோது தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலைக்கு கழிவகற்றும் நடமாடும் வண்டி ஒன்று இருந்தால் கழிவகற்றல் செயற்பாடுகளைத் துரிதமாகவும் வினைத்திறனுடனும் அகற்ற முடியும என்று வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி ம்.உமா சங்கரால் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அதற்கு வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சே.சுகிர்தன், தமது பிரதேச சபை ஊடாக ஆதார வைத்தியசாலைச் செயற்பாடுகளுக்கு கழிவகற்றும் வண்டி ஒன்றை வழங்குவ்தாக உறுதியளித்தார்.

அதன் அடிப்படையில் இந்த கழிவகற்றும் வண்டியை வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளரும் நோயாளர் நல்ன்புரிச்சங்க உறுப்பினருமான சோ.சுகிர்தன் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.இரவீந்திரன் ஆகியோர் வழங்க வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியகலாநிதி ம.உமா சங்கர் வலி.வடக்கு பிரதேசசபை உறுபபினரும் ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளருமாகிய லயன் சி.ஹரிகரன் ஆகியோர் உத்தியோக பூர்வமாக பெற்றுக்கொண்டனர். (63)

# அழகியற் கண்காட்சி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அழகியல் துறை மாணவர்களின் அழகியற்கண்காட்சி இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் றொமைன்குக் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.சண்முககுமார் கலந்து கொண்டு கண்காட்சியினை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். இக்கண் காட்சியில் சித்திரம், சங்கீதம், நாடகம் ஆகிய துறைசார்ந்த மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளது. (63)

# சி.சி. அன்ட் பிறதேர்ஸ்'ம் 'சீ இந்தப்பழம் புளிக்கு'மும்




**'இனி நாம் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி கிளையிடமிருந்து மனிதாபிமானம் பாரபட்சமின்மை நடுவுநிலைமை என்பதை எதிர்பார்க்காமல் இருப்போமாக!' எண்டு சீ.சீ. அன்ட் பிறதேர்ஸின்ரை 'தமிழ்வின' இணையத்தளம் திருவாய் மலர்ந்தருளியிருக்கு.**

இதைப் பழச்சிட்டு உண்மை நிலவரம் என்னவாயிருக்கும் எண்டு கிளிநொச்சியில இருக்கிற செஞ்சிலுவைச்சங்க வட்டாரத்தில விசாரிச்சால்....

1. இந்தச் செஞ்சிலுவைச் சங்கத்தின்ரை கிளிநொச்சிக் கிளையின்ரை செயலாளராக இருந்து கொண்டே அரசியல் வேலை பார்த்திருக்கிறார் இந்தச் சீ.சீ. போனதடவை பாராளுமன்றத்தேர்தல் நடக்கேக்க, தனக்கு ஆதரவாக செஞ்சிலுவைச்சங்கத்தின்ரை பேரில பேப்பரில விளம்பரமே குடுப்பிச்சிருக்கிறார் ஆள். அப்பிடியே தன்ரை தேர்தல் பரப்புரை வேலைகளுக்குத் தாராளமாக செஞ்சிலுவைச் சங்கத்தின்ரை வளங்களையும் ஆளணியையும் பாவிச்சிருக்கிறார்.

2. இப்ப வடக்கு மாகாணக் கல்வி அமைச்சராக இருக்கிற தம்பிராஜா குருகுலராஜா இதே கிளிநொச்சிக் கிளையில தலைவராக இருந்து கொண்டுதான் சிறிதரன் எம்பியின்ரை கூட்டங்களில கலந்து கொண்டு அரசியல் நடத்தி, தனக்கு ஆதரவைத்தேடி மாகாண சபைத் தேர்தலில வெற்றியையும் பெற்றிருக்கிறார்.

3. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்ரை கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணிச் செயலாளரான வேழமாலிகிதன் எண்டவரும் இதே செஞ்சிலுவைச் சங்கத்தின்ரை ஒரு முக்கியமான உறுப்பினர்தான். இப்பகூட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்களின் சம்மேளனத்தில் சமூக வலுவூட்டல் உத்தியோகம் பார்த்துக்கொண்டு முழங்காவில் பக்கத்தில கட்சி வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

4. சிறிதரன்ரை வலக்கை எண்டு தன்னைத் தானே சொல்லிக்கொண்டிருக்கிற ஜீவநாயகம் எண்டவரும் இந்தச் செஞ்சிலுவைச் சங்கத்தில சமூக வலுவூட்டல் உத்தியோகத்தராக வேலை செய்து கொண்டு கட்சியின்ரை அரசியல் வேலையைத் தான் செய்து கொண்டிருக்கிறார்.

5. இப்ப புதிசாக செஞ்சிலுவைச் சங்கத்தின்ரை மாவட்ட நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டிருக்கு. அதில பளைப் பகுதிக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறவரும் சிறிதரன் எம்பியின்ரை ஆள்தான். முந்தி ஒரு உபதபால் உத்தியோகத்தராக இருந்தவர். இன்னொரு மெம்பர் கிளிநொச்சி மேற்குப் பகுதியில இருக்கிற சந்திரசேகரம்.

'இப்பிடிக் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தையே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்ரை கூடாரமாக்கி வைச்சுப்போட்டு, இப்ப எங்களின்ரை தலையில புளியைக் கரைக்கிறார் சிறிதரன்' எண்டு குமுறிக்கொண்டிருக்கிறார் செஞ்சிலுவைச் சங்கத்தின்ரை இயக்குநர் சபையின்ரை தலைமைப்பொறுப்பில இருக்கிறவர்களில ஒருத்தர்.

'தன்ரை முதுகிலயே ஊத்தையை வைச்சுக்கொண்டு மற்றவையளப் பற்றி அளந்து கொட்டுகிறார் சிறிதரன். இதையெல்லாம் தெரிஞ்சு கொண்டும் நாங்கள் இவ்வளவு நாளும் பேசாமல் இருந்ததுதான் பிழை. இப்ப எங்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின்ரை கொழும்புத் தலைமையகத்தாலயும் விசாரிக்கப்போகினம். இஞ்ச ஊருக்கையும் அவனவன் கேள்விக்கு மேல கேள்வி கேட்கிறான்' எண்டெல்லாம் பொங்கி வெடிக்கிறார் இந்த இயக்குநர் சபையைச் சேர்ந்தவர்.

'இருந்தாப்போல உங்களுக்கும் சிறிதரன் எம்பிக்கும் இடையில அப்பிடி என்ன பிரச்சினை வந்திது?' எண்டு கேட்டன்.

'போன திங்கட்கிழமை (23.06.2014) கிளிநொச்சிக் கச்சேரியில செஞ்சிலுவைச் சங்கத்தின்ரை ஒரு கூட்டம் நடந்திது. கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் ஒருங்கிணைந்த சமூக மீள் எழுச்சித்திட்டம் எண்டு புதிசாக வேலைகளை ஆரம்பிக்கிறதைப் பற்றின கூட்டம் அது. அதில பிரதேசங்களின்ரை ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் எண்ட ரீதியில சந்திரகுமார் எம்பியை அந்தக் கூட்டத்துக்குக் கூப்பிட்டிருந்தினம்.

அதில சந்திரகுமார் எம்பி எங்கட செஞ்சிலுவைச் சங்கத்திற்குள்ள நடக்கிற உள்ளரசியல் நடவடிக்கையளைப் பற்றிச் சாடைமாடையாகக் கொஞ்சம் சொல்லிப் போட்டார். இதுதான் சிறிதரன் எம்பிக்கு இப்ப பிரச்சினை. அவரை (சந்திரகுமார் எம்பியை) ஏன் இந்தக் கூட்டத்துக்குக் கூப்பிட்டவை. அவரைக் கூப்பிட்டதாலதான் தேவையில்லாத பிரச்சினையெல்லாம் வந்து தன்ரை ஆக்களுக்கு வேலையில்லாமல் போறது மட்டுமில்லை, செஞ்சிலுவைச் சங்கத்தின்ரை வளங்களை வைச்சே அரசியல் நடத்திறதுக்கும் ஆப்பு வைச்சமாதிரி ஆகீட்டுது எண்ட வயித்தெரிச்சல்தான்.... இந்த வயித்தெரிச்சலதான் அவர் ஜீ.ஏ யையும் தாக்கியிருக்கிறார். இது மாதிரி அவர் முந்திப் பல பள்ளிக்கூட வாத்திமாரையும் அதிபர்மாரையும் தாக்கி இழிவுபடுத்த முயற்சித்தவர்' எண்டார் அவர்.

எல்லாம் நல்லாய்த்தானிருக்கு... நவநீதம்பிள்ளை அம்மாவையே தங்களுக்குச் சமைச்சுப் போடவேணும் எண்டு நினைக்கிற ஆக்களோட போய் இதுகளைப்பற்றி நாங்கள் பேச முடியுமா?

அது சரி, இது ஆர் இந்தச் **'சி.சி அன்ட் பிறதேர்ஸ்'?**

**இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் அவரின்ரை தம்பிமாரும் நடத்திறதுதான் இந்தத் தமிழ்வின், லங்கா சிறி, ஜே.வி.பி, கல்லறை.... அது இது எண்டு இன்னும் ஏராளம் முகமூடி இணையத்தளங்கள்... போதாக்குறைக்கு ஆயிரம் பேரில முகப்புத்தகங்கள்....**

இப்பிடியெல்லாம் வைச்சுக்கொண்டே மற்றாக்களின்ரை சுதந்திரம், சுயாதீனத்தைக் கட்டுப்படுத்திற மாதிரிச் செய்திகளைத் தயாரிச்சுப்போடுறதும் அவதூறுகளை எழுதிறதும் பொய்யைத் தாராளமாக உற்பத்தி செய்து விக்கிறதும் நடக்குது....

யாழ்ப்பாணத்தில ஒரு செத்தவீட்டுப்பேப்பர் எண்டால், இணையத்தில செத்தவீட்டு விளம்பரங்களைப் போட்டே சீவிக்கிற, 'சி.சி குறூப்'பின்ரை இணையத்தளங்கள் இருக்கு...

இதுதான்.... மற்றவனைப் பேயனாக்கலாம்.... பேய்ப்புண்ணாக்கனாக்கக் கூடாது எண்டு சொல்லிறது.

உன் அண்டை வீட்டுக்காரனை நேசிப்பதுபோல
உன் விரோதியையும் நேசி - மாத்யூ

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## "ஒன்றும் செய்ய விடுகினமில்லை..."

பலருக்கும் தெரிந்த ஒரு பிரபலமான பகிடிக் கதை.

உடம்பில் எங்கு தொட்டாலும் வலிக்கிறது என்று சொல்லி ஒருவன் டொக்டரிடம் போனானாம். அவனது எல்லா அவயவங்களையும் பரிசோதித்த டொக்டர், எங்கேயும் புண்ணோ நோயோ இருப்பதாகத் தெரியவில்லை, உங்களுக்கு ஒன்றுமில்லை நீங்கள் நலமாகத்தான் இருக்கிறீர்கள் என்கிறார்.

நம்மாளோ, இல்லை டொக்டர், நான் தொடும் இடங்களில் எல்லாம் இப்போதும் வலிக்கிறது என்கிறான். டொக்டர் மண்டையைக் குழப்பிக்கொண்டு, கன நேரமாக ஆராய்ந்த பிறகு கண்டுபிடிக்கிறார்–அவனுக்கு வேறெந்த அங்கங்களிலும் கோளாறில்லை; அவனது சுட்டுவிரலில்தான் புண் இருக்கிறது! அதுதான் அவனுக்குத் தொடும்போதெல்லாம் வலிக்கிறது.

தேர்தல் வெற்றிகளையும் பதவிகளையும் மட்டுமே குறிக்கோளாய்க் கொண்ட நம் தலைவர்களிடமும் இதே பிரச்சினைதான். எல்லாவற்றுக்கும் காரணமாகக் காட்ட, ஒரு எதிரியை வெறுப்பேற்றி, அந்த வெறுப்பை வடிய விடாமல் வைத்துக்கொண்டால், மக்களிடமிருந்து வரும் மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் சமாளித்து விடலாம் என்று பக்காவாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் சுட்டுவிரலை எதிரியிடம் நீட்டிவிடுவதுதான் அந்த உபாயம். நீங்கள் அவர்களை என்ன கேட்டாலும், நோ அங்கே இருப்பதாகத்தான் அவர்கள் சொல்லுவார்கள்.

மக்களே தீர்வு கிடைக்கவில்லையா, அரசுதான் காரணம். அல்லல் படுகிறீர்களா, அரசுதான் காரணம், வேலையில்லை, கல்வி வாய்ப்புகளில்லை, அபிவிருத்தியில்லை, போர் முடிந்து ஐந்து வருடமாகியும் வாழ்நிலை முன்னேறவில்லையா, அரசுதான் காரணம்.

சர்வதேசம் ஏன் இன்னும் தீர்வு கொண்டுவரவில்லை என்கிறீர்களா, அரசுதான் காரணம். மாகாண சபையால் உங்களுக்கு எதுவும் நடைபெறவில்லையா, அதற்கு அரசின் ஆளுநர் காரணம். (நமக்குச் சம்பளம், வாகனம் மற்றும் அலவன்சுகள் சலுகைகள் எல்லாம் கிடைப்பதற்கு மட்டும்... மக்களே முதலில் உங்கள் வாக்குகளும் பிறகு எங்கள் விடாமுயற்சியும் காரணம்)

தேர்தல் பிரச்சாரத்தில் நாம் செய்வோம் என்று சொன்னவைகளைச் செய்யவில்லையா, அரசுதான் காரணம். உங்கள் நாளாந்தப் பிரச்சினைகளைக் கேட்பதற்காக உங்களைத் தேடிவரவோ அவற்றை நிறைவேற்றித் தருவதற்கான போராட்டங்களில் ஈடுபடவோ முடியவில்லையா, இங்கு தொடர்ந்தும் இருக்கப்போகும் அரசின் ராணுவம் காரணம்.

எங்கள் விவசாய அமைச்சர் கடைசியாகக் கண்டுபிடித்திருப்பது போல், எங்கள் இளைஞர்களுக்கு எங்களால் வேலைவாய்ப்பு எதையும் பெற்றுத்தர முடியவில்லையா, அதற்கு இங்கே எல்லா வேலைகளையும் தாங்களே பார்த்துக் கொண்டிருக்கும் அரச ராணுவம் காரணம்.

அதிகம் அலம்பிக் கொண்டிருப்பான் ஏன்? நாங்கள் சொன்னபடி தீர்வையும் கொண்டுவராமல், மக்களது தேவைகள் முன்னேற்றங்களுக்கும் எதையுமே செய்யாமல் சும்மா வெளிநாடு சுற்றித் திரிகிறோம் என்று துரோகிகள் குற்றம் சாட்டுகிறார்களே, அதற்கும் அரசுதானே காரணம் என்பது அசல் தமிழர்களுக்குப் புரியும்!

அரசும், ராணுவமும், ஆளுநரும் உங்களை ஒன்றும் செய்ய விடுகினமில்லை என்றால், உங்களால் முடியாத ஒன்றை அரசாங்க சார்பான கட்சியொன்று செய்ய முன்வருவதை விட்டுப் பார்க்க வேண்டியதுதானே!

யார் செய்தாலும் அது தமிழர்களுக்கு நன்மையானது என்றுதானே கருத வேண்டும். மாகாண சபையால் மக்களுக்குக் கிடைக்கக் கூடியவற்றை எடுத்துத் தரக்கூடியவர்களிடம் அதை ஒப்படைத்துவிட்டு, நீங்கள் சர்வதேசத்தின் போர்க்குற்ற விசாரணையைத் துரிதப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தச் செல்வதுதானே முறை?

- ஆசிரியர்

# விசாரணைக்குழுவை உள்ளே அனுமதிப்பது உயர்நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும்

## – தயான்ஜயதிலக சொல்கிறார் –

ஐ.நா.விசாரணைக்குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பாக உயர்நீதிமன்றமே தீர்மானம் எடுக்கவேண்டும் என்று முன்னாள் இராஜதந்திரியான தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

மேலும் சாட்சியம் வழங்கும் நபர்களையும் பாதுகாக்கவும் உயர்நீதிமன்றமே தீர்மானம் எடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சாட்சியங்களைப் பாதுகாப்பது தொடர்பில் ஐ.நா.வுக்கான முன்னாள் வதிவிடப் பிரதிநிதியும் இராஜதந்திரியுமான பேராசிரியர் தயான் ஜயதிலக கூறியதாவது, சாட்சியங்களை பாதுகாக்கவும் ஐ.நா. விசாரணையாளர்களை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பிலும் உயர்நீதி மன்றமே தீர்மானம் எடுக்க வேண்டும். 2006 ஆம் ஆண்டு சாட்சியங்களைப் பாதுகாக்கும் சட்டம் தொடர்பாக பேசப்பட்டது. அது திருகோணமலையில் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்கள் தொடர்பில் சாட்சியமளிப்பவர்களுக்கானது. ஆனாலும், அதுவும் இன்று இல்லை. எனவே, இன்று நடக்கவுள்ள ஐ.நா. விசாரணையில் சாட்சியமளிக்கவுள்ளவர்கள் தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே, அரசாங்கமோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ எந்தத் தரப்பினராவது முன்வந்து சாட்சியங்களை பாதுகாப்பது தொடர்பாக உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர வேண்டும். ஐ.நா. விசாரணை வலுப்பெற்ற ஒன்று. விசாரணை ஆரம்பமாகவுள்ளதற்கு முதலே சாட்சியங்களைப் பாதுகாக்க வேண்டும் என்றார்.

அதேவேளை, சாட்சியங்களைப் பாதுகாப்பது தொடர்பில் மாற்றுக்கொள்கைக்கான நிலையத்தின் பணிப்பாளரும், மனித உரிமை ஆர்வலருமான கலாநிதி பாக்கியசோதி கூறுகையில், ஐ.நா. விசாரணைக் குழுவில் சாட்சியமளிக்கவுள்ள சாட்சியாளர்களைப் பாதுகாக்க இலங்கையில் எவ்வித சட்டங்களும் இல்லை. உள்நாட்டில் சாட்சியங்களை திரட்டுவதே ஐ.நா. விசாரணைக்குழுவின் பிரதான பணியாக இருக்கும் நிலையில், சாட்சியங்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை. தனிநபர் மட்டுமன்றி, ஏனைய சாட்சியங்களைப் பாதுகாப்பதும் கடினமான விடயமே என அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐ.நா. விசாரணைக்குழுவுக்கு வழங்க சாட்சியங்களை சேகரிப்பதாக ஏற்கனவே கூறியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா. மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகளிடமும் சாட்சியங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாய் திறந்தால் ஆபத்து இது கோத்தாவின் எச்சரிக்கை

மங்கள சமரவீர வாயைப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசியல் தேவைகளுக்காக நாட்டின் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்களை மங்கள சமரவீர வெளிப்படுத்தி வருகின்றார்.

வாய்க்கு பிரேக் இன்றி இவ்வாறான கருத்துக்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தால், மக்கள் மங்களவிற்கு தகுந்த பாடம் கற்பிப்பார்கள்.

மங்கள சமரவீர இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார். இதனால் முஸ்லிம் மக்கள் இராணுவத்தின் மீது நம்பிக்கையை இழக்கக் கூடும்

இவ்வாறு போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அரச இரகசிய சட்டங்களின் அடிப்படையில் மங்களவின் கருத்துக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளது என கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்பு இரகசியங்களை அம்பலப்படுத்தும் தேசத்துரோகம்

## – மங்கள மீது கண்டனம் –

(கொழும்பு)

பண்டைய காலங்களிலும் புலனாய்வுப் பிரிவுகளை காட்டிக்கொடுத்த இனத்துரோகிகள் இருந்தனர் என நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இப்படியான காட்டிக் கொடுப்புக காரணமாக புலனாய்வு அதிகாரிகளுக்கு ஆபத்து ஏதும் நேர்ந்தால், அவர்களின் பெயர்களை வெளியிட்டவர்கள் அதற்கு முற்றாக பொறுப்புக் கூற வேண்டும்.

அரச பாதுகாப்பு என்பது நாட்டின் பாதுகாப்பாகும். நாட்டின் பாதுகாப்புக்காக பாதுகாப்புப் படையினரைத் தவிர அதனுடன் தொடர்புடைய புலனாய்வுப் பிரிவும் உள்ளது.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் தகவல்களை சேகரிக்கும் புலனாய்வுப் பிரிவு என்பது உலகத்தில் ஆரம்பத்தில் இருந்தே இருந்து வருகிறது.

இலங்கையில் பண்டைய காலங்களில் புலனாய்வுப் பிரிவுகள் இருந்ததாக வரலாற்று குறிப்பேடுகளில் எழுதப்பட்டுள்ளது. அதில் யார் இருந்தனர் என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.

நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடையவர்கள் பற்றி வெளியார் அறிந்து கொள்வது அவர்களின் உயிர்களுக்கு ஆபத்தாக அமைந்து விடக் கூடும்.

1848 ஆம் ஆண்டு அப்புலா என்பவரின் போராட்டம் குறித்த தகவல்களை தரம்பவெவே என்பவர் ஆங்கிலேயருக்கு வழங்கினார். இந்தக் காட்டிக்கொடுப்பால் முழுப் போராட்டமும் பாதிக்கப்பட்டதுடன் பலரது உயிர்கள் காவு கொள்ளப்பட்டன எனவும் எல்லாவல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அண்மையில் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் பற்றிய தகவல்களை வெளியிட்டிருந்தமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

# மகாவலி கங்கையில் சுவாமி விக்கிரகங்கள்

## வீசியவர்கள் யார்? விசாரணை ஆரம்பம்

பழமைவாய்ந்த ஐந்து சுவாமி விக்கிரகங்கள், கருடன் சிலை உள்ளிட்ட மேலும் சில பொருட்கள் மகாவலி கங்கையின் மினிப்பே அணைக்கட்டுப் பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொல்பொருட்களை எடுத்துச் சென்ற சந்தேகநபர்கள் சிலரை பொலிஸார் பின் தொடர்ந்து சென்றபோது அவர்கள் அந்தச் சிலைகளை கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சந்தேகநபர்களால் மகாவலி கங்கையில் வீசப்பட்ட ஐந்து சுவாமி விக்கிரகங்களும் கருங்கல்லினால் செதுக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்..

கிடைத்த தகவலுக்கு அமையவே சந்தேக நபர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்பை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

தொல்பொருட்களை கைவிட்டுச் சென்ற சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

அவர்களை கைது செய்வதற்கான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# சிங்கள பாசிசத்திற்கு எதிரான போராட்டம்

## தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து

அளுத்கமவில் முஸ்லிம்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் பல சம்பவங்களின் தொடர்ச்சியாக ஏற்பட்டது, அதன் சரியான தன்மை, காரணங்கள் மற்றும் அதை நடத்தியவர்கள் போன்ற விபரங்கள் இன்னமும் உறுதிப்படுத்தப் படவேண்டும்.

மாவனல்லயில் காவல்துறையினர் மீது நடத்தப்பட்ட அசிட்வீச்சு, பொது பல சேனாவின் நீண்ட நாள் இலக்கான வண.வட்டரக்க விஜித தேரர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டது, மற்றும் பாணந்துறையில் உள்ள "நோ லிமிட்" களஞ்சியம் தீ வைத்து அழிக்கப் பட்டது போன்றவையும் அதில் அடங்கும்.

நடப்பவைகளை பார்க்கும்போது எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், யாரோ அல்லது எதுவோ சமாதானத்தை குலைக்க முடுக்கி விடப்பட்டுள்ளது அல்லது அது தனது கட்டுப்பாட்டை இழந்து விட்டது என்று.

இது 1970 களில் நவீன பாசிச இயக்கம் இத்தாலியில் நடத்திய அச்சமூட்டும் வன்முறையை நினைவு படுத்துகிறது, அது நடத்திய பயங்கரவாதச் செயல்களை, பதற்றம் மூலோபாயத்தின் ஒரு பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மிகவும் குழப்பம் ஏற்படுத்துவது என்னவென்றால், சிங்கள பௌத்த பயங்கரவாத குழுக்களின் சாத்தியமான இருப்பு மற்றும் அரச இயந்திரங்களுக்குள்ளேயே அவர்களின் இடைமுக அதிர்வுகள் ஊடுருவி இருப்பதற்கான சாத்தியங்கள் இணைந்துள்ளன என்பதுதான்.

சரியான நேரம் மற்றும் சூழ்நிலையில் உணரப்படும் வெளிப்புற அச்சுறுத்தல் மற்றும் உள்ளக வாய்ப்புகள் காரணமாக ஒரு திருப்புமுனை ஏற்படலாம், பின்னோக்கிச் சுழன்றால், கொலைகள் (1959இல் நடந்ததை போன்று) அல்லது இராணுவ மூலமான ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு, ஏற்படுவதுடன் மத்திய தரத்தில் உள்ள தீவிரவாத மாற்றத்துக்கு ஆதரவான இளையோர்கள் சட்டபூர்வமான பௌத்த ஆயத்துல்லாக்களாக திருநிலைப் படுத்தப்படலாம்.

இத்தகைய பரம்பரையின் வரலாற்றை குறைந்தது ஜனாதிபதி டிபி.விஜேதுங்காவின் இடைக் கால ஆட்சிக் காலத்துக்கு பின்னோக்கிப் பார்த்தால், ஐ.தே.க. யினுள் நீண்டகாலமாக இயங்கி வந்த நடைமுறையான சிங்கள பௌத்த பழமைவாதத்துக்கு புத்துயிர் வழங்கும் கட்டாய நடவடிக்கை அந்த காலகட்டத்தில் பிரேமதாசாவின் செயல்களுக்கு விரோதமானவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாஸவின் பல் இன, பல் சமய, பல் மொழி கொள்கைகள் புலிகளால் அவர் கொலை செய்யப்படுவதில் நின்றும் அவரைக் காப்பாற்றவில்லை மற்றும் ஒருவேளை அதை உறுதிப்படுத்தவே செய்தது.

சிங்கள பௌத்த பழமைவாதத்துக்கு சார்பாக அந்தக் கொள்கையை தூக்கியெறிந்த ஜனாதிபதி விஜேதுங்க, பெரும்பான்மையினர் மற்றும் சிறுபான்மையினரை முறையே மரத்துக்கும் மற்றும் அதை பற்றிப் பிடிக்கும் கொடிகளுக்கும் உதாரணம் காட்டிப் பேசிய புல்லரிக்கும் வரிகள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

பாரிய காட்சித் தன்மையும் மற்றும் அழுத்தமும் உள்ள ஐ.நா. சர்வதேச விசாரணையில் இப்போது இணைந்திருப்பவர் மார்ட்டி அதிசாரி, கொசோவா மற்றும் சூடான் பிரிவினையில் அனுசரணையளராக கடமையாற்றிய பின்லாந்துக் காரரான இவரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கைக்கு கொண்டுவந்தார், அதனை ஜே.வி.பி. யின் ஆதரவுடன் லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்த்தார்.

தமிழ்நாட்டில் இருந்து வெளிப்படும் மூர்க்கத்தனமான கோஷங்கள்,

ரி.என்.ஏ மற்றும் வட மாகாணசபை தீவிரவாதிகளினால் எழுப்பப்படும் ஆத்திரமூட்டும் பொருத்தமற்ற கோஷங்கள் மற்றும் நடவடிக்கைகள்,

**சிங்கள பாசிசத்துக்கு எதிரான போராட்டம், தேசிய அரசியல் பிரதான நீரோட்டத்திலிருந்து அதனால் நடத்தப்பட வேண்டும், மற்றும் அதன் அதிர்வலைகள் அதற்கு உள்ளிருந்தே வரவேண்டும். சிங்கள பௌத்தம் மற்றும் சிங்கள தேசிய வாதம் போன்றவைகளுடன் நேரடியாக மோதுவதால் சிங்கள பாசிசத்தை தோற்கடிக்க முடியாது. அல்லது தேசிய – ஜனநாயக மூலோபாயம் மூலம், ஐக்கிய இலங்கை தேசம் மற்றும் அரசாங்கம் என்பனவற்றை கட்டியெழுப்பி வெளித் தலைமீடுகள் மற்றும் தமிழ் பிரிவினை வாதம் என்பனவற்றை எதிர்ப்பதன் மூலம் வெளியிலிருந்தும் அதனை தோற்கடிக்க முடியலாம்.**





**பாசிசத்துக்கு எதிரான போராட்டத்தின் நோக்கம், பாதுகாப்பு, அடிப்படை ஜனநாயகத்தை பாதுகாப்பது அல்லது மீளமைப்பது என்பனவற்றை புரிந்து கொள்வதாக இருப்பது அவசியம், முதலாளித்துவம் அல்லது அரசாங்கத்தை கவிழ்ப்பதாக இருக்கக்கூடாது. இது பரந்த ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டிய தேவையை ஏற்படுத்துவதாக உள்ளது.**

பின்வருவனவற்றில் மகிந்த ராஜபக்ஸ மற்றும் அவரது சகோதரர்கள் அடைந்திருக்கும் இரட்டைத்தோல்விகள் -

(அ) மே 2009இல் இலங்கை ஜெனிவாவில் செய்ததைப்போல கூட்டணியை மீண்டும் கட்டியெழுப்பி அந்த மூலோபாயத்துக்கு திரும்பவும் வந்து, ஐ.நா. சர்வதேச விசாரணைகளில் ஆயுதப் படைகளை வெற்றிகரமாக பாதுகாப்பது,

(ஆ) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மிதவாத மையக் கருத்துக்கு புத்துயிர் அளிப்பது மற்றும் மத்திய தளத்தில் உள்ளவர்களிடம் முறையிடுவது போன்றவற்றை செய்து சிங்களத் தீவிர வாதத்தை எதிர்ப்பது.

ஜூலை 1983இல் இருந்ததை விட இன்று அந்த மிருகம் மிகவும் ஆபத்தானதாக உள்ளது, ஏனெனில் காவல் துறை மற்றும் ஆயுதப் படையில் அது பாரிய அதிர்வை உண்டாக்குகிறது - ஆகவே கொலை பாதக வன்முறைக்கான பாரிய பயிற்சி மற்றும் அனுபவத்தை அது பெற்றுள்ளது - அதே போல வியாபார சமூகத்தில் உள்ள சிங்கள பௌத்த கட்சிக் குழுக்களிடமும் அதன் தாக்கம் உள்ளது.

பாசிசத்தின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுப்பதிலும் மற்றும் போராடுவதிலும் மனித நேயம் மிகப் பெரிய விலையை கொடுத்து அநேக பாடங்களைக் கற்றுள்ளது. 1920 மற்றும் 1930 களில் நல்ல பத்து வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலத்தில் சிறந்த மார்க்சிய மூளைகள், தீவிர இடதுசாரிகள் (பெரும்பாலும் போலி அறிவாளிகள்) பாசிச வரையறுப்பை புரிந்துகொள்ளத் தவறியதாக பாசாங்கு செய்யும் குட்டி முதலாளிகள் ஆகியோருக்கு எதிராகவும், மிகவும் கடுமையான வடிவத்தில் நடப்பிலுள்ள தேசியவாதம் மற்றும் இனவாதம் அல்லது தவிர்க்க முடியாமல் வளர்ந்துள்ள தசைக்கட்டியை போன்ற நலிந்த முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்தியம் என்பனவற்றுக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது.

சரியான மூலோபாயம், மிகவும் மாறுபட்ட வரிசையிலுள்ள மேதைகளான இடதுசாரித் தலைவர்களான, லெனின், ட்ரொஸ்க்கி, ஸ்ராலின், டிமிட்ரோவ், மற்றும் மாவோ போன்றவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஐக்கிய முன்னணியாக இருந்தது.

அந்த ஐக்கிய முன்னணியின் விரிவாக்கத்தில், முதலாளித்துவ வர்க்கம் அல்லது அதன் வேறு பிரிவுகள் அதில் சேர்க்கப்பட வேண்டுமா அல்லது இல்லையா. அல்லது இடது மற்றும் உழைப்பாளர் வர்க்க இயக்கம் என்பனவற்றின் போக்குகள் மட்டும்தான் அதில் சேர்க்கப்பட வேண்டுமா என்கிற கருத்துக்களின் முரண்பாடுகள் தோன்றின.

இறுதியாக உள்நாட்டில் பிரபலமாக கருதப்பட்டதும் மற்றும் உலகளவில் ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் காலனித்துவ நாடுகள் மற்றும் அதன் தலைவர்களான சேர்ச்சில், ஸ்ராலின், ரூஸ்வெல்ட் மற்றும் டிகோல் ஆகியோரை உள்ளடக்கிய விரிவான ஐக்கிய முன்னணியை உருவாக்க வரலாற்று அவசியம் ஏற்பட்டது.

பாசிசத்துக்கு எதிரான போராட்டத்தின் நோக்கம், பாதுகாப்பு, அடிப்படை ஜனநாயகத்தை பாதுகாப்பது அல்லது மீளமைப்பது என்பனவற்றை புரிந்து கொள்வதாக இருப்பது அவசியம், முதலாளித்துவம் அல்லது அரசாங்கத்தை கவிழ்ப்பதாக இருக்கக்கூடாது. இது பரந்த ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டிய தேவையை ஏற்படுத்துவதாக உள்ளது.

பிரதான எதிரியை தனிமைப்படுத்தி சாத்தியமானளவு பரந்த ஐக்கிய முன்னணியை உருவாக்கும் அதேவேளை வெற்றிகொள்ளக் கூடிய அனைவரையும் வெற்றி கொள்வதோடு, வெற்றி கொள்ள முடியாதவர்களை நடுநிலைப் படுத்த வேண்டும் என்கிறார் மாவோ. எல்லாவற்றையும் கவிழ்ப்பதற்கு வழிதேடுபவன் எதையுமே கவிழ்த்துவிட முடியாது என்று மாவோ பரிகாசமாகச் சொல்லியிருக்கிறார்.

இன்று இலங்கையில் பிரதான எதிரி யார்? மகிந்த ராஜபக்ஸவா? தனது ஆயுதப்படைகளை உள்ளடக்கிய இலங்கை அரசாங்கமா? சிங்கள பௌத்தமா? அல்லது அனைத்துமா?

சமகால இலங்கையின் அரசியல்மூலோபாயம் நடுநிலைப்படுத்த வேண்டியதை இன்றிமையாததாக்குகிறது, அல்லது மிகவும் ஆபத்தான எதிரியான தீவிரவாதப் பிசாசுடன் போராடுவதற்காக சிறிய பிசாசுகளுடன் கூட்டு வைக்கலாம்என்கிறது.

இன்று இலங்கையில் உள்ள கொள்கை முரண்பாடு என்ன? ஒரு புறம் மிகவும் முக்கியமாக சிங்கள பௌத்தர்களை உள்ளடக்கிய அளவுக்கு அதிகமான பெரும்பான்மை பிரஜைகளின் நலன்கள் (கருத்தியல் முக்கியமாகவேண்டிய அவசியம் இல்லை) மற்றும் இலங்கை ஆயுதப்படைகள் - அது அமைதியான, நிலையான, இறையாண்மையுள்ள, ஐக்கிய ஜனநாயக நாட்டை பாதுகாக்கிறது.

மறுபுறத்தில் தேசிய இறையாண்மை, உறுதிப்பாடு, பாதுகாப்பு, சமாதானம், ஐக்கியம் மற்றும் ஜனநாயகம் என்பனவற்றுக்கு அச்சுறுத்தல் விடுப்பவர்கள், பிரதானமாக சர்வதேச விசாரணையை தூண்டும் தமிழ் பிரிவினைவாதிகள் உட்பட்ட வெளி சக்திகள் மற்றும் சிங்கள பௌத்த தீவிரவாதிகளின் பிரிவினைவாத போராளிகள் ஆகியோர்.

1985இல் மொஸ்கோவில் நடைபெற்ற இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் உலக மாநாட்டின் போது, இரண்டு பழைய கால புரட்சி வீரர்கள் உரையாற்றினார்கள். ஒருவர் 1933இல் எல்சல்வடோரில் பிரசித்தமான பராபவுண்டோ மார்ட்டி தலைமையில் இடம்பெற்ற கம்யுனிச கிளர்ச்சியில் பங்கேற்ற தலைவர்களில் ஒருவரான மிக்குவல் மார்மோ, மற்றவர் கெர்ட் ஜூலியஸ் கோல்ட்ஸ்ரீன் என்கிற ஜேர்மனியின் யூத கம்யுனிஸ்ட், இவர் ஸ்பெயின் உள்நாட்டு யுத்த அனுபவம் உள்ளவரும், ஒஸ்சுவிட்ஸ் மற்றும் புச்சன்வால்ட் வதை முகாம்களில் அடைபட்டு உயிர் பிழைத்தவரும் மற்றும் நாஜிக்களுடன் போராடிய பாசிச எதிர்ப்பு போராளிகளின் உலக ஒன்றியத்தின் தலைவருமாவார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை ஊடாக ஊடுருவல்
## புதுடில்லி அதிகாரிகள் உஷார்

(கொழும்பு)


இந்தியாவுக்கு வேண்டப்படாத மனிதர்கள் இலங்கைக்கு ஊடாக இந்தியாவுக்குள் நுழைவதைத்தடுக்க புதிய செயற்றிட்டம் வரையப்பட்டுள்ளது.


தீவிரவாதிகள் இலங்கையின் கடல் வழி ஊடாக இந்தியாவை ஊடுறுக்கக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்திய அதிகாரிகளினால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கு இடமானவர்கள் இலங்கை வழியாக இந்தியாவை அடைய முயற்சித்து வருவதாக தகவல்கள் கிட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த முயற்சிகளை முறியடிக்கும் நோக்கில் இந்திய கரையோரப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக கடத்தல்கள் மற்றும் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்களவர்களுக்கு சரியான தலைமை
## மகிந்தவை விட எவரும் கிடையாது
### இப்படிச் சொல்கிறது பொதுபலசேனா





(கொழும்பு)


இந்த நாட்டுக்கும் சிங்கள மக்களுக்கும் தலைமை தாங்கக் கூடிய தகுதி மகிந்த ராஜபக்சவுக்கு மட்டும் தான் உண்டு அவரை விட தலைமைத்துவத்துக்கு தகுதியானவர் எவரும் இல்லை என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை அரசியல் ரீதியாக தோற்கடிப்பதற்கு எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என்று பொது பல சேனா சூளுரைத்துள்ளது.

மௌபிம பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியில், பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இவ்வாறு கூறியுள்ளார். நாட்டில் 30 வருடங்களாக நீண்டு கொண்டிருந்த யுத்தத்தை வெற்றிகரமான முறையில் முடிவுக்குக் கொண்டு வந்தவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சதான். அதுமட்டுமன்றி இந்நாட்டின் சிங்கள பௌத்தர்களுக்கு உரிய தலைமைத்துவம் வழங்கியதும் அவர்தான்.

சிங்கள மக்களின் தலைமைத்துவத்திற்கு தகுதியானவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தான். அவரை விடத் தகுதியானவர் யாரும் தற்போதைக்கு நாட்டில் இல்லை. இதன் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் அவர் மீது காழ்ப்புணர்ச்சியுடன் செயற்பட்டு வருகின்றனர். அரசியல் ரீதியாக அவரைத் தோற்கடிப்பதற்கு சதிமுயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

அளுத்கம சம்பவம் போன்ற கலவரங்களை உருவாக்கி தமது இலக்குகளை அடைந்து கொள்ள முயற்சிக்கின்றனர். அதற்கு பொதுபலசேனா ஒருபோதும் இடமளிக்காது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## டெங்கு நோய்ப்பரவல்
## தெற்கில் மீண்டும் உக்கிரம்



தெற்கில் இப்போது என்றும் இல்லாதவாறு டெங்கு நோயின் தாக்கம் உக்கிரம் அடைந்துள்ளது டெங்கு நோயத் தொற்றானது இந்த மாதத்தில் அதிகரித்துள்ளதாக தொற்று நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு நோயத் தொற்று காரணமாக, இந்த மாதத்தில் இது வரையான காலப்பகுதியில் வரை, நானகாயிரத்து 267 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, நிறைவடைந்த 6 மாத காலப்பகுதியினுள், டெங்கு நோய் தொற்றுக் காரணமாக 41 பேர் மரணமானது டன். 17 ஆயிரத்து 102 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். இந்த நோயத் தொற்றுக் காரணமாக, மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தொற்று நோயத் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

## அளுத்கமவில் தங்க நகைகள் சூறை
## பேருவளையில் இரத்தினக்கற்கள் மாயம்
### காலம் கடந்து கசிகிறது தகவல்

(கொழும்பு)

அளுத்கம, பேருவளை, தர்கா நகர் பகுதிகளில் அண்மையில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பிரதான சந்தேகநபர்கள் 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக ஏஎவ்பி செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதி முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலவரங்கள், தாக்குதல் சம்பவங்களுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மேலும் இவர்களிடமிருந்து கடைகளில் கொள்ளையடிக்கப்பட்ட இரத்தினக்கற்கள் மற்றும் தங்கநகைகள் என்பன மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முஸ்லிம்களின் றமழான் நோன்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் வன்செயல்கள் இடம்பெறலாம் என்றும் முஸ்லிம் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அளுத்கம பகுதியில் இடம் பெற்ற வன்செயல்களின் போது கடைகளில் பொருட்கள் மற்றும் தங்கநகைகள் என்பனவற்றை கொள்ளையிட்டவர்கள், தீயிட்டவர்கள் என நம்பப்படுவோரை அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவின் உதவியுடன் அவர்கள் கொள்ளையிட்ட பொருட்கள் சகிதம் பொலிஸார் கைது செய்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அளுத்கம பகுதியில் ஆரம்பித்த முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள் பின்னர் பேருவளை, பெந்தோட்டை பிரதேசங்களுக்கும் பரவியதை தொடர்ந்து அங்கு பல கடைகள் எரிக்கப்பட்டும் சூறையாடப்பட்டும் உள்ளன.

மேலும் பெந்தோட்டை பகுதியிலுள்ள இரண்டு ஆபரண விற்பனை நிலையங்கள் கலகக்காரர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அரபு உலக எதிர்ப்பு அலையை
## சமாளிக்க களம் குதிக்கிறார் சம்பிக்க



(கொழும்பு)

அளுத்கம சம்பவத்தின் எதிரொலியாக அரபு உலக நாடுகளிடமிருந்து வரும் எதிர்ப்பு அலையை சமாளிக்க அமைச்சர் சம்பிக்க ரணவக்க புதிய முயற்சியொன்றில் இறங்கியுள்ளார்.

இதன் ஒரு கட்டமாக அளுத்கம சம்பவம் குறித்து முஸ்லிம் நாடுகளுக்கு அமைச்சர் சம்பிக்க ரணவக்க விளக்கமளிக்கவுள்ளார். முஸ்லிம் நாடுகளின் தூதரகங்கள் உயர்ஸ்தானிகராலயங்களுக்குச் சென்று விளக்கமளிக்க உள்ளார்.

அளுத்கம, பேருவளை ஆகிய பிரதேசங்களில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விளக்கமளிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து ஏற்கனவே ஈரான் மற்றும் பாகிஸ்தான் தூதரகங்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

நாட்டில் இயங்கி வரும் சகல தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களுக்கும் சென்று சம்பவம் குறித்து பூரண விளக்கமளிக்க சம்பிக்க ரணவக்க திட்டமிட்டுள்ளார்.

முஸ்லிம்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களுக்கு முஸ்லிம் நாடுகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குரோதம் வளர்ப்போருக்கு எதிராக சட்டம் இயற்றாதது ஏன்?
### அமைச்சர் வாசு கேள்வி



(கொழும்பு)

இன மத ரீதியாக குரோத உணர்வுகளைத் தூண்டும் பிரச்சாரங்களை தடுக்கும் சட்டம் இதுவரை இயற்றாமைக்கு காரணம் என்ன என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பியுள்ளார்.

குரோத உணர்வைத் தூண்டும் வகையிலான உரையாற்றுவோருக்கு தண்டனை விதிக்கப்படக் கூடிய வகையில் சட்டதிருத்தம் செய்யப்பட வேண்டுமெனவும் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இன மத ரீதியாக குரோத உணர்வைத் தூண்டும் வகையிலான பிரசாரங்களுக்கு இது வரையில் உத்தியோகபூர்வமாக தடை விதிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகளைத் தூண்டும் வகையில் செயற்படுவோரை தண்டிக்கக் கூடிய வகையில் சட்ட திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு இன சமூகங்களும் ஒடுக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். இது ஓர் ஜனநாயக நாடு எனவும், மதத் தலைவர்கள் உள்ளிட்ட எவரும் தேர்தலில் போட்டியிட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சாட்சியங்களை பாதுகாக்க
## பொருத்தமான பொறிமுறை தேவை

ஐ.நா.விசாரணைக் குழுவுக்கு முன்னால் சாட்சியம் அளிக்கும் நபர்களை பாதுகாப்பதற்கான பொருத்தமான பொறிமுறை ஒன்று வடிவமைக்கப்பட வேண்டும் என்று சிவில் சமூக பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையின் உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உயர்ஸ்தானிகர் நவிப்பிள்ளையின் விசாரணைக் குழு தயாராகியுள்ள நிலையில், அவ் விசாரணைக் குழுவில் சாட்சியமளிக்கவுள்ள சாட்சியங்களை பாதுகாக்க முடியாத நிலை இலங்கையில் இருக்கின்ற காரணத்தினாலேயே சிவில் சமூகமும் மனித உரிமை ஆர்வலர்களும் இதனைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

இது தொடர்பில் முன்னாள் இராஜதந்திரியும், ஜெனீவாவுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதியுமான பேராசிரியர் ஜயந்த தனபால கூறுகையில், ஐ.நா. விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கவுள்ளவர்களுக்கு பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை இருக்கிறது.

2006ஆம் ஆண்டு சாட்சியங்களைப் பாதுகாக்கும் சட்டம் ஒன்றை அரசாங்கம் கொண்டு வருவதாக கூறியது.

தொடர்ந்து அமைச்சரவையில் இதுபற்றிப் பேசினார்கள். ஆனால், அதன்பின்னர் எவ்வித பேச்சுக்களும் இல்லை. சாட்சியமளிப்பவர் தண்டனைக் குட்பட்டாலோ அல்லது சித்திரவதைக்குட்படுத்தப்பட்டாலோ அவர்களுக்கு எதிராக தண்டனை வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்குரியது. எனவே, அரசாங்கம் சாட்சியங்களை பாதுகாக்க விஷேட நடைமுறை ஒன்றை அமுல்படுத்த வேண்டும். அமெரிக்காவில் சாட்சியங்களை பாதுகாக்கும் சட்டம் நடைமுறையிலுள்ளது.


மேலும் ஐ.நா.வின் விசாரணைக்கு அரசு எதிர்ப்புத் தெரிவிப்பதை உத்தியோகபூர்வமாக இதுவரை மனித உரிமைகள் ஆணையகத்துக்கு அறிவிக்கவில்லை எனவும் கூறினார்.

## மதநிந்தனை செய்தால்
## தண்டனை நிச்சயம்

மத நிந்தனை செய்பவர்களுக்கு இனி மன்னிப்புக் கிடையாது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்தி இனம் மற்றும் மத நிந்தனையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால், பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.






வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது..... (48)

# உவராகிவரும் விவசாயநிலத்தை பாதுகாக்க பூநகரிக் குளப்புனரமைப்பு வெற்றியளிக்கும்

## - சந்திரகுமார் எம்.பி .தெரிவிப்பு -

(பூநகரி)

பூநகரி மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வுகாணுதல் மற்றும் உவராகிவரும் விவசாய நிலங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பூநகரிக் குளப்புனரமைப்பு திட்டம் நிச்சயமாக வெற்றியளிக்கும். என ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



பூநகரிக் குளத்தை நிர்மாணிப்பதற்கான செயற்றிட்ட முனனேற்பாடு தொடர்பான கலந்துரையாடலில் விவசாயிகளுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூநகரியில் உள்ள பல சிறு குளங்களை ஒன்றிணைத்து பாரியளவில் பூநகரிக் குளத்தை நிர்மாணிப்பதற்கான திட்டத்தை நாம் வகுத்துள்ளோம். இதனூடாக பூநகரிப் பிரதேசத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதோடு, உவராகி வரும் விவசாய நிலங்களைப் பாதுகாக்கும் நோக்குடனும் இத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு நாம் திட்டமிட்டோம். முதற்கட்டமாக அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆய்வு அறிக்கை ஒன்றினை தயாரிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு அதனை நிறைவு செய்யும் கட்டத்தை நெருங்கியுள்ளோம். அத்தோடு, இத்திட்டத்திற்கு மிகப் பெருந்தொகையான நிதி தேவைப்படுகின்ற நிலையில், நிதியைப் பெறுவதற்கான செயற்பாடுகளிலும் நாம் சமகாலத்தில் ஈடுபட்டு வருகின்றோம். ஏற்கனவே, தேசிய நீர்வழங்கள் வடிகாலமைப்புச் சபை அமைச்சின் மூலம் 10 மில்லியன் ரூபா நிதி பெறப்பட்டு ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவும் இக்குளத்தை நிர்மாணிப்பதில் அதிக ஆர்வம்காட்டி வருகின்றார் என அவர் தெரிவித்தார்.

எமது மாவட்டத்தில் குடிநீர் என்பதே இன்று பெரும் பிரச்சினையாக எதிர்கொள்ளப்படுகின்றது. மக்கள் மட்டுமன்றி கால்நடைகள் கூட நீருக்காக அலைந்து திரியும் அவலத்தை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இந்தச் சம்பவங்கள் உண்மையான மனித நேயம் கொண்டவர்களின் நெஞ்சங்களை உருக்கும் காட்சிகளாக அமைந்துள்ளன.

இக்கலந்துரையாடல் மற்றும் கள ஆய்வுகளில் பூநகரிப் பிரதேச செயலர் சத்தியசீலன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் விசேட வேலைத்திட்டப் பணிப்பாளர் பாரதிதாசன், பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர்களான இராசலிங்கம் மற்றும் குகேந்திரன் ஆகியோரும் கிளிநொச்சி மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர் தயாரூபன் மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் அதிகாரி உள்ளிட்ட பூநகரிப் பிரதேசத்தில் இயங்கும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளும், விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

# காம்யோற்சவ பெருவிழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் காம்யோற்சவப் பெருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து நாட்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 06ஆம் திகதி சண்முக திருநடன விழாவும் 21ஆம் திகதி திங்கட்கிழமை திருக்கார்த்திகை திருவிழாவும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 26ஆம் திகதி சனிக்கிழமை ஆடி அமாவாசையையொட்டி கீரிமலை கண்டாங்கி தீர்த்தத்தில் இடம் பெறும் தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவுபெறும்

தற்போது ஆலயத்தில் இடிந்துள்ள கட்டடங்களை திருத்தும் பணிகள் நடைபெற்று வருவதால் இம்முறையும் கொடியேற்ற நிகழ்வுகள் இடம்பெறாத போதிலும் உற்சவ தினத்தில் உரிய உற்சவங்கள் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து கொடியேற்ற நிகழ்வுகளுடன் அடுத்தாண்டு உற்சவங்கள் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (48)

# முரசின் இன்றைய பலன்

(30.06.2014 திங்கட்கிழமை)



ஜய வருஷம் ஆனிமாதம் 16 ஆம் திகதி.
திருதியை / சித்தம்.
பூச நட்சத்திரம் மு.ப. 11.34 வரை. பின் ஆயிலியம்.
இராகு காலம 07.26 - 08.56 வரை. சுபநேரம 11.56 - 01.26 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மொழிப்பிரச்சினை காரணமாக வெளிநாட்டு மணமகனை சேரமுடியாது தவித்தல், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டாத துணைவருடன் முரண்படுதல். |
| ரிஷபம் | கானல் நீரை நிஜமென்று நம்பியது போல உதவி செய்ய போலிவேடத்தில் வந்தவரை நம்பி ஏமாந்து போதல். |
| மிதுனம் | சக ஊழியர்களுடன் சுமுக உறவினைக்கொண்டதால் பணித்தேக்கம் மறைதல். |
| கடகம் | ஒவ்வாமை காரணமாக தோல் நோய் ஏற்பட்டு தேக சுகம் பாதிப்படைதல், குறித்த விலையை மறைத்து அதிக விலையில் பொருட்களை விற்பனைசெய்ய முயலல் . |
| சிம்மம் | எதிர்பாராத பதவியுயர்வு ஏற்பட்டதால் ஆனந்தத்தில் திளைத்தல், பொறுமை சகிப்புத்தன்மையினால் குடும்பத்தில் நிலவிய முரண்பாடு விலகல். |
| கன்னி | தொல்லை கொடுத்துக்கொண்டவரிடமிருந்து தப்ப "சிம் காட்டை" மாற்றிவிடல், தீர்மானிக்கப்பட்ட விவாகம் விசாரணை முடிவில் கைவிடல். |
| துலாம் | காலாவதித்திகதி தப்பிய பொருளை வாடிக்கையாளர் மீது கட்டியடிக்க முயலுதல், அநாவசியத்தலையீட்டினால் சச்சரவுண்டாகல். |
| விருச்சிகம் | சரியான முகவரியைத் தேடிக்கண்டு பிடிக்க அலைச்சலும் அகால போஜனமும் தக்கவைத்தல், அடிக்கடி நோயினால பீடிக்கப்படல். |
| தனுசு | புதிய யுக்தியைக்கையாண்டதால் தேங்கிய பொருட்கள் விற்பனையாகிவிடல், ஏற்றத்தாழ்வு பார்க்காமல் சமமாக நடாத்தமுற்பட்டதால் ரகளை அற்றுப்போதல். |
| மகரம் | உரியவரிடம் பொருளைச் சேர்க்காதபடியினால் தில்லு முல்லு ஏற்பட்டுப் பின் சமரச நிலைக்கு வருதல், அடகு வைத்த ஆபரணங்களுக்கு வட்டிகட்டல். |
| கும்பம் | பதவியைக்கைப்பற்ற பழி சுமத்த முயன்று அவமானப் படல், இரத்த உறவினர் வெளிநாட்டினின்றும் வந்ததால் மகிழ்வேற்படல். |
| மீனம் | வரன்தேடி அலைவதால் தேகநலம் பாதிக்கப்பட்டு மனக் கிலேசமடைதல், அஷ்டமத்துச்சனி இருப்பதினால் புதிய முயற்சிகளில் ஈடுபடத்தயங்குதல். |

# அலங்கார உற்சவம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம், கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய மணவாளக்கோல அலங்காரஉற்சவம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

தினமும் மாலை 3.30 மணிக்கு ஸ்நபனா அபிஷேகமும் நடைபெற்று மாலை 5.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெறும்.

எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை சங்காபிஷேகமும் மாலை இரததோற்சவமும் இடம்பெறவுள்ளதுடன் 23ஆம் திகதி புதன்கிழமை காலை தீர்த்த உற்சவமும் இடம்பெற்று வியாழக்கிழமை வைரவர் சாந்தியுடன் திருவிழாக்கள் நிறைவுபெறும்.

அத்துடன் ஒவ்வொரு திருவிழாவன்றும் நண்பகல் 12.30 மணிக்கு அன்னதானம் வழங்கப்படுமெனவும் ஆலய பூசகரும் பரிபாலகருமான ம.ஞானசேகரம் அறிவித்துள்ளார். (85)

# மீள்குடியேறிய 15 குடும்பங்களுக்கு நிதியுதவிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்ற அமைச்சின் உதவித் திட்டத்தின் கீழ் அண்மையில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் மீளக்குடியேறிய 15 குடும்பங்களுக்கு மலசல கூடம் அமைப்பதற்கான நிதியுதவிகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

உடுவில் உதவி பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பதினைந்து குடும்பங்களுக்கு முதற் கட்டமாக பன்னிரெண்டாயிரம் ரூபாவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

ஒரு மலசல கூடத்துக்கு அறுபதாயிரம் ரூபா ஒதுக்க பட்டுள்ள போதிலும் கட்டம் கட்டமாக செய்யும் வேலைகளுக்கு ஏற்ப இந்தத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான மு.சந்திரகுமார், உடுவில் பிரதேச செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன் மற்றும் வலி.தெற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் க.அரிகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (48)

## ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட்

# கிண்ணம் வென்றது சென்றலைட்ஸ்

## பெண்கள் மென்பந்து கிரிக்கெட்டில் மூளாய் விக்ரோரியா சம்பியன்






(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி-20 வெற்றிக் கிண்ணத்தை யாழ். சென்றலைட்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது. இதேவேளை, பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் தொடரில் மூளாய் விட்ரோரியா அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் மாவட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும், யாழ். சென்றலைட்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி ஆரம்பம் முதலே மந்தமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்று வந்தது. ஒரு முனையில் அதிரடி வீரர் ஜெயரூபன் நிலைத்து நின்றபோதும், மறுமுனையில் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டவண்ணமிருந்தன. குறிப்பாக, டர்வினின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் கொக்குவில் கே.சி.சி.சி. அணி விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயரூபன் மூன்று, சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 35, உமாகாந், பவிதரன் ஆகியோர் 10, ராகுலன் 13, சத்தியன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டர்வின் நான்கு, எரிக் துசாந், கோகுலன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 115 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றலைட்ஸ் அணி முதலிரு விக்கெட்டுக்களை வேகமாகப் பறிகொடுத்தது. மூன்றாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய எட்வேட் எடின், அணித் தலைவர் ஜேம்ஸுடன் சிறிது நேரம் தாக்குப் பிடித்தபோதும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த ஜேம்ஸ், செல்டன் இணை கொக்குவில் கே.சி.சி.சி. அணியின் பந்து வீச்சாளர்களை திணறடித்து ஓட்டங்களை வேகமாகக் குவித்ததுடன் அணியை விரைவாக வெற்றிக்கு அழைத்துச் சென்றது. இறுதியில் யாழ். சென்றலைட்ஸ் அணி 17.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜேம்ஸ் மூன்று சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 38, செல்டன் இரண்டு சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 51 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. மற்றும் எடின் 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சிலோஜன், ஜனுதாஸ், பவிதரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக டர்வின், தொடர் ஆட்டநாயகன் மற்றும் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரர் விருதை வதுசனன், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக ஜெரிக் துசான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, பெண்களுக்கான ஐந்து ஓவர்கள் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் மூளாய் விக்டோரியா அணியும், பண்டத்தரிப்பு பெண்கள் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மூளாய் விக்ரோரியா அணி 5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்வராணி 10, ரஜிதா 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுதர்சிகா, தனோஜா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 40 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பண்டத்தரிப்பு பெண்கள் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சுதர்சிகா 10 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் தேனுஜா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் போட்டியின் ஆட்டநாயகியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டி நிகழ்வில் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் கணேசராசா, மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், வடமாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் டிவகலாலா, உட[illegible] விளையாட்டு ஆர்வலர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் கழங்களின் தலைவர்கள், செயலாளர்கள், வீர,வீராங்கனைகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (எஸ்.பி., 93, 48)




வெற்றிக் கிண்ணத்தை ருசித்த சென்றலைட்ஸ்

# கோலோச்சியது கொலம்பியா

## காலிறுதிக்கு முதன் முறையாக முன்னேற்றம்



சிறிய தென்அமெரிக்க நாடான கொலம்பியா உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டத்துக்கு முதன் முறையாக முன்னேறியுள்ளது.

20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதில் கொலம்பியா, உருகுவே அணிகள் மோதின போட்டி இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 1.30 மணிக்கு நடைபெற்றது. ஆரம்பம் முதலே கொலம்பியா அணி சிறப்பாக ஆடி பந்தை தமது கட்டுப்பாட்டில் அதிக நேரம் வைத்திருந்தது. இதன் பயனாக முதல் பாதி ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் கொலம்பிய வீரர் ஜேம்ஸ் ரோட்ரிகஸ் முதல் கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார். இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் உருகுவே அணி செயற்பட்டபோதும் கோல் அடிக்கும் வாய்ப்புக்களை அந்த அணி வீரர்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தொடர்ந்தும் சிறப்பாகச்செயற்பட்ட கொலம்பியா வீரர் ஜேம்ஸ் ரோட்ரிகஸ் 50ஆவது நிமிடத்தில் மற்றுமொரு கோலைப் போட்டு அணியின் ஸ்திரத் தன்மையை அதிகரித்தார். இறுதி வரை கோல் அடிக்க முயன்ற உருகுவே அணியின் போராட்டம் கைகூடவில்லை. நிறைவில் கொலம்பிய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இதன் மூலம் உலகக் கிண்ணக் கால்பந்து வரலாற்றில் கொலம்பிய அணி முதன் முறையாக காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. போட்டியின் ஆட்ட நாயகனாக ஜேம்ஸ் ரோட்ரிகஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, காலிறுதிப்போட்டியில் கொலம்பிய அணி பிரேசில் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இப்போட்டி யூலை நான்காம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய ஆட்டம்

**பிரான்ஸ் எதிர் நைஜீரியா**
**இலங்கை நேரம்**
**இரவு 9.30**

**ஜேர்மனி எதிர் அல்ஜீரியா**
**இலங்கை நேரம்**
**நள்ளிரவு 12.30**

# நடந்தது என்ன?

## கடி மன்னன் விளக்கம்



இத்தாலி அணியின் சியலினியை வேண்டுமென்றே நான் கடிக்கவில்லை. தெரியாமல் அவர் தோள் மீது என் பல் பட்டுவிட்டது என உருகுவே அணியின் லூயிஸ் சுவாரஸ் சர்வதேச கால்பந்து சம்மேளனத்திற்கு கடிதம் எழுதியுள்ளார்.

லீக் போட்டியில் இத்தாலி வீரர் சியலினியின் தோள் பட்டையில், உருகுவேயின் லூயிஸ் சுவாரஸ் கடித்தார். இதை விசாரித்த சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா), 9 போட்டிகளில் பங்கேற்க சுவாரசுக்கு தடை விதித்தது. சுவாரசும் தொடரிலிருந்து வெளியேறி நாடு திரும்பினார். இவரின் தடைக்கு ஆதரவும், எதிர்ப்பும் கிளம்பியது. ஆர்ஜன்ரீன அணி ஜாம்பவான் மாரடோனா கூட, சுவாரஸ் கொலைக் குற்றமா செய்துவிட்டார் என ஆவேசப்பட்டார். இவ்வளவு ஏன், கடி வாங்கிய சியலினி கூட, சுவாரசுக்கு தந்த தண்டனை அதிகம் எனவும், இதனால் அவரது குடும்பமும் பாதிக்கப்படும் என்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இச்சம்பவம் குறித்து சுவாரசிடம் பிபா சார்பில் கேட்கப்பட்டது. சர்வதேச கால்பந்து சம்மேளனத்திற்கு சுவாரஸ் எழுதிய கடிதத்தில், இத்தாலிக்கு எதிரான போட்டியில் நடந்ததை எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை. சியலினியுடன் மோதியவுடன் என் நிதானத்தை இழந்துவிட்டேன். நிலைதடுமாறிய நான் அவரின் தோளின் மீது, என் பற்களை வைத்துவிட்டேன். இதன் பின் என் பற்கள் வலிக்க ஆரம்பித்துவிட்டன. சியலினியை நான் கடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படவில்லை என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உலகக் கிண்ணத்தை வெல்வதே இலக்கு

## தங்கக் காலணி விருது குறித்து சிந்திக்கவில்லை

தங்கக் காலணி விருதை விட, எங்கள் அணி கிண்ணத்தை வெல்லவேண்டும் என்பதே எனது இலக்காக உள்ளது என ஜேர்மனியின் நட்சத்திர வீரர் முல்லர் தெரிவித்துள்ளார்.

பிரேசிலில் நடைபெற்றுவரும் 20ஆவது உலகக் கிண்ணக்கால்பந்துப் போட்டியில், அதிக கோல் அடித்து தங்கக் காலணி விருதை தட்டிச் செல்லக் கடும் போட்டி நிலவுகிறது. நட்சத்திர வீரர்கள் மெஸ்சி (ஆர்ஜன்ரீனா), நெய்மர் (பிரேசில்) ஆகியோருக்கு சவாலாக ஜேர்மனியின் அனுபவ வீரர் தோமஸ் முல்லர் விளங்கி வருகிறார். லீக் சுற்றின் முடிவில் இந்த மூன்று வீரர்களுமே தலா 4 கோல் போட்டுள்ளதால், விலகல் சுற்றில் இவர்கள் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. உலகக்கோப்பையில் முல்லர் இது வரை விளையாடியுள்ள 9 ஆட்டத்தில் 9 கோல் அடித்துள்ளார். 2010இல் அவர் 5 கோல் அடித்து தங்க காலணி விருதை தட்டிச் சென்றதுடன் சிறந்த இளம் வீரராகவும் தேர்வு செய்யபப்ட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், 2014 உலக கோப்பையிலும் தங்கக்காலணி அவருக்கே கிடைக்கும் என்று முன்னணி வீரர்கள் மற்றும் முன்னாள் பிரபலங்கள் பலர் கணித்துள்ளனர். எனினும், தங்கக் காலணி விருந்தை விட ஜேர்மனி அணி உலகக் கோப்பையை வெல்வதே தனக்கு முக்கியமானது என்று முல்லர் கூறியுள்ளார். காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ஜேர்மனி அணி இன்று அல்ஜீரியாவை எதிர்கொள்ளும் நிலையில், முல்லர் இது குறித்து கூறியதாவது: அனைத்து வீரர்களும் உற்சாகமாக உள்ளனர். விலகல் சுற்று சவாலுக்கு தயாராக உள்ளோம்.

தனிப்பட்ட முறையில் தங்கக் காலணி விருதை வெல்வதை விட, எங்கள் அணி உலகக் கோப்பையை வெல்ல வேண்டும் என்பதிலேயே எனது முழுக் கவனமும் உள்ளது. அதிக கோல் சாதனையில் எனக்கு இப்போது ஆர்வம் இல்லை. என்னிடம் தான் ஏற்கனவே ஒரு தங்கக் காலணி உள்ளதே. உலக சம்பியன் ஆக வேண்டும் என்றே விரும்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## கால்பந்து துளிகள்...

சிலியை வீழ்த்திய பிரேசில் அணி, உலகக் கிண்ணக் கால்பந்து அரங்கில் 12ஆவது முறையாக காலிறுதிக்கு முன்னேறியது. இதில் ஐந்து முறை *(1958, 62, 70, 94, 2002)* ,சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

உலகக் கோப்பை அரங்கில், பிரேசில் அணி, சிலிக்கு எதிராக 100 சதவீத வெற்றியைப் பதிவு செய்தது. இதுவரை மோதிய நான்கு போட்டியிலும் பிரேசில் அணி வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது. முன்னதாக 1962இல் அரையிறுதி, 1998, 2010இல் ர்வுண்ட்-16" சுற்றில் பிரேசில் அணி, சிலியைத் தோற்கடித்தது.

## களத்திற்கு வெளியில்....

லூயிஸ் சுவாரஸ், சியலினிக்கு இடையே நடந்த சம்பவத்தை நான் பார்க்கவில்லை. அப்போது, பந்த வேறு இடத்தில் இருந்ததால் அதை கவனித்துக் கொண்டிருந்தேன். ஆனால், சுவாரஸுக்கு சர்வதேச கால்பந்து சம்மேளனம் போட்டித் தடை விதித்தமை எனக்கு உண்மையில் தெரியாது. இது குறித்து என்னால் எந்தவித கருத்தையும் கூற முடியாது.

**மார்க்கோ ரோட்ரிகஸ் (போட்டி நடுவர்)**

சர்வதேச கால்பந்து சம்மேளனம் சுவாரஸுக்கு தடை விதித்த முடிவு சரியானது. தடை விதிக்கப்படவில்லை எனில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நிகழும். சுவாரஸ் செய்ததை வேறு எந்த வீரரும் செய்யக் கூடாது. அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை மற்ற வீரர்களுக்கு சிறந்த பாடமாக இருக்கும்.

**பீலே (பிரேசில் கால்பந்து ஜாம்பவான்)**

உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரில் ஒரு வீரர் கடித்த சம்பவம் ஏற்றுக்கொள்ள முடியாதது. இதற்கான தண்டனையை 7 நீதிபதிகள் கொண்ட சர்வதேச கால்பந்து சம்மேளன ஒழுங்கு நடவடிக்கை குழு தான் அளித்துள்ளது. இந்த வீரர் முன்பு நடந்து கொண்ட விதத்தையும் இவர்கள் கவனத்தில் எடுத்தனர். தற்போது பிரேசில் மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவதை விட, போட்டியை இரசித்துப் பார்க்கின்றனர். தொடரை அமைதியுடன் நடாத்த ஒத்துழைப்புத் தருவதற்கு நன்றி.

**செப் பிளேட்டர்**
**(சர்வதேச கால்பந்து சம்ளேனத் தலைவர்)**

## செரீனா அதிர்ச்சித் தோல்வி

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் முதல் நிலை வீரர் செரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகின்றது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் முதல்நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 25ஆம் நிலை வீராங்கனை கோர்னாட் (பிரான்ஸ்) மோதினர்.

முதல் செட்டை செரீனா வில்லியம்ஸ் 6-1 என்ற கணக்கில் எளிதாகக் கைப்பற்றினார். ஆனால் அடுத்த செட்டில் கோர்னாட் சிறப்பாக விளையாட்டி 6-3 என்ற செட் கணக்கில் கைப்பற்றினார். 3ஆவது மற்றும் கடைசி செட்டிலும் கோர்னாட் கை ஓங்கியது. அந்தச் செட்டை 6-4 என்ற கணக்கில் தனதாக்கி அபார வெற்றி பெற்றார். செரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். 4ஆவது சுற்றில் கோர்னாட் கனடா வீராங்கனை பவுசர்ட்டை சந்திக்கிறார்.



## பிரேசில் இரசிகர்களின் இரகசியம்

உலகக் கோப்பையை தங்கள் அணி வெல்ல வேண்டும் என்பதற்காக பில்லிசூனியம், ஆடு, கோழி பலி கொடுப்பது உட்பட பலவிதமான வழிமுறைகளை பிரேசில் நாட்டு இரசிகர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். போட்டிகள் முடியும் வரை ஒரே ஜீன்சை போட்டுக் கொண்டிருக்கும் இரசிகர்களும் ஏராளம். "எதிரணி பெயரை ஒரு துண்டுச் சீட்டில் எழுதி அதை ஒரு கிளாசில் வைத்து பிரிட்ஜின் பிரீசர் பாக்சில் வைத்துவிடுவேன். இதனால் அந்த அணி வீரர்களால் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாது" என்கிறார் ஒரு இரசிகர். சாப்பிடாமல் விரதம் இருந்து தனது சக்தியை பிரேசில் வீரர்களுக்கு பரிமாற்றம் செய்வதாகக் கூறுகிறார் இன்னொருவர்.

# ஐ.நா.வின் முன்னெடுப்புகளும், இலங்கையின் நகர்வுகளும்

- வே.அர்ச்சுணன் -








இலங்கை மீதான போர்க்குற்றச் சாட்டுகளுக்குரிய விசாரணைகளை இலங்கையில் நடாத்துவதற்கு இலங்கை கடுமையான எதிர்ப்பை ஆரம்பத்திலிருந்து வெளிப்படுத்தி வருகிறது. இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் போர்க்குற்றச் சாட்டுகள் தொடர்பில் விரிவான விசாரணை-களை நடாத்தி இலங்கையில் நல்லிணக்கத்தை உருவாக்க முனைப்புக் காட்டவேண்டும் என ஜக்கிய நாடுகள் சபை இலங்கைமீது கடுமையான அழுத்தத்தை கொடுத்து வந்ததுடன் அதற்குரிய கால அவகாசத்தையும் வழங்கிவந்தது.

ஆனால் இலங்கை அந்த கால அவகாசத்தை சரியான முறையில் பயன்படுத்தவில்லை எனவும் பொறுப்புக்கூறத் தவறிவிட்டது என்றும் அமெரிக்கா பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கைமீது குற்றம் சாட்டுகின்றன. இலங்கைக்கு எதிரான தீர்மானத்தையும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றின.

இந்த நிலையில், தங்களால் அமைக்கப்பட்டுள்ள குழு கட்டம் கட்டமாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொறுப்புக் கூறல், மற்றும் நல்லிணக்கம் போன்றன உடனடியாக ஏற்படுத்தப்படக் கூடியவை இல்லை கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் இலங்கைத் தரப்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், இதை நிராகரித்த மேற்குலகும் ஐக்கிய நாடுகள் சபையும் போர்க்குற்ற விசாரணைகளை நடாத்துவதற்குரிய முன் ஆயத்தப் பணிகளில் தமது கவனத்தைச் செலுத்தியுள்ளன.

ஆனால் இலங்கையினுடைய உள்வீட்டு விவகாரங்களை இலங்கை தானே கையாளும் எனவும் வெளியாரின் தலையீடு இதற்கு அவசியம் இல்லை எனவும் இலங்கை வலியுறுத்தி, அதற்குரிய தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றி இருந்தது.

ஐக்கிய நாடுகள் சபை தனது நடவடிக்கைகளில் உறுதியாக இருப்பதுடன்; விசாரணைகளுக்கான நிபுணர்கள் பெயர்களையும் வெளியிட்டுள்ளது. சமாதானத்திற்கான நோபல் பரிசை வென்றுள்ளவரும் பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியுமான மார்ட்டி அத்திசாரி, நியூஸிலாந்தின் முன்னாள் ஆளுநர் ஜெனரல் சில்வியா கார்ட்ரைட் மற்றும் பாகிஸ்தான் உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் அஸ்மா ஜெஹாங்கீர் ஆகியோரே அந்த மூன்று வல்லுநர்களுமாவர். இவர்கள் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவுக்கு ஆலோசனை வழங்கவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தால் அமைக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை நடாத்தும் என்றும் இலங்கை அரசாங்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்காவிட்டாலும் தடைகளை மீறி இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் மனித உரிமைகள் ஆணையகம் உறுதிபட அறிவித்துள்ளது.

மேற்குலகம் இங்கு மூக்கை நுழைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் ஐக்கிய நாடுகள் சபை இந்த விடயத்தில் அவசரம் காட்டி வருவதாகவும் இந்த விவகாரத்தை இலங்கை தானே கையாளும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொறிமுறைகளை உடைக்கக் கூடிய வல்லமையில் இருப்பதாகவும் இலங்கையும் தனது அறிவிப்பை உறுதிபட வெளிப்படுத்தியுள்ளது.

எது எப்படியோ ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணையாளர்கள் குழுவினர் இலங்கைக்கு வருவதற்கு இலங்கை தனது பாராளுமன்றத்தின் ஊடாக சட்டரீதியாக தடையை ஏற்படுத்தியுள்ளதுடன் தனது இறைமையை அவமதிக்கும் விதத்தில் மேற்குலகம் நடக்கக்கூடாது எனவும் தனது தரப்பு நியாயங்களை வெளிப்படுத்தியுள்ளது. அதேவேளை ஐ.நா. விசாரணைக் குழுவின் நகர்வுகளை ராஜதந்திர ரீதியில் முறியடிப்பதற்குரிய காய் நகர்த்தல்களையும் இலங்கை மேற்கொண்டு வருகிறது. இலங்கை எந்த நெருக்கடிகளை சந்தித்தாலும் அந்த நெருக்கடிகளின் அவசியம் கருதி உரிய சந்தர்ப்பத்தில் தான் இலங்கைக்கு உதவுவேன் என சீனா ஏற்கனவே அறிவித்துள்ளது.

இலங்கை மீதான விசாரணை என்பது ஐக்கிய நாடுகள் சபைக்கு சிக்கலான ஒரு விடயமாக இருந்தாலும் தனது செயற்பாட்டில் உறுதியாக இருக்கின்றது. இலங்கை இதை எவ்வாறு ராஜதந்திர ரீதியில் உடைக்கப்போகின்றது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.



"ஓப நத்துவா ஓப எக்கா" என்கிற சிங்கள வாக்கியத்துக்கு "உன்னோடு இருந்தபோது, நீ இல்லாத போது" என்று பொருளாம். அதாவது தமிழர்களுக்கு புரியும்படி சொல்வதாக இருந்தால் With you, Without you. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட திரைப்படம் திடீரென தமிழகத்தில் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது. தியேட்டரில் திரையிட முடியாத நிலை ஏற்பட்டவுடன், நண்பர் தமிழ் ஸ்ருடியோ அருண் ஏற்பாட்டில் படம் பார்க்க விரும்புபவர்களுக்காக பிரத்யேக திரையிடல் சென்னையில் நடந்தது.

ஐம்பத்தி இரண்டு வயதாகும் பிரசன்ன, இலங்கையின் மிக முக்கியமான இயக்குநர். அவருடைய முதல் படமே ஓ.சி.ஐ.சி. விருதுகளில் ஒன்பது பிரிவுகளில் வெற்றி பெற்றிருக்கிறது. லியோ டால்ஸ்டாயின் நாவலான புத்துயிர்ப்பு நாவலை தழுவி இவர் இயக்கிய படம் ஏராளமான சர்வதேச விருதுகளை வென்று குவித்திருக்கிறது.

"ஒப நத்துவா ஒப எக்கா", போருக்குப் பின்னான இலங்கை மக்களின்

# சிறு பிள்ளைகளில் உடற்பருமனடைதல் நோய்

கிந்துஷா ஸ்ரீசெல்வசதீஸ்குமார்
நீரிழிவு சிகிச்சை நிலையம்
யாழ் போதனா வைத்தியசாலை.

சிறுபிள்ளைகளில் ஏற்படும் உடற்பருமனடைதலானது உலக அளவிலேயே பாரிய பிரச்சினையாக மாறி வருகின்றது. தொற்றாத நோய்களில் ஒன்றாகக் கருதப்படும் உடற்பருமனடைதல் கடந்த சில தசாப்தங்களாக பெருமளவில் அதிகரித்து வருகின்றது.

பிள்ளையின் உடற்திணிவுச் சுட்டியானது (பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டிலுள்ள வரைபுக் கமைய) 98ஆவது சென்ரலை (98th centile) விட அதிகமாக உள்ள போது உடற்பருமனடைதல் நோயாகவும் 85ஆவது சென்ரைலை(85th centile) விட அதிகமாக உள்ள போது அதிக எடையுள்ள பிள்ளையாகவும் கருதப்படும்.

உள்ளெடுக்கப்படும் கலோரியின் அளவுக்கும் செலவிடப்படும் கலோரியின் அளவிற்கும் இடையில் உள்ள சமமின்மை காரணமாகவே உடற்பருமனடைதல் என்னும் நோய் ஏற்படுகின்றது.

பெரும்பாலான பிள்ளைகள் உடற்பருமன் அதிகரிப்பதற்கு அதிக கலோரி அடங்கிய உணவு வகைகளை உள்ளெடுப்பதும், உடற்பயிற்சி செய்யும் வீதம் குறைவடைந்துள்ளமையுமே பிரதான காரணிகள் ஆகும். அதிக கலோரி அடங்கிய உணவு வகைகளாக துரித உணவுகள் (Fast foods), சோடா வகைகள், சொக்லேற், இறைச்சி வகைகள், மாப்பொருள் கூடிய சீனிச்சத்துள்ள உணவுவகைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வகையான உணவுவகைகளின் கலோரிப் பெறுமானம் எமக்கு நாளாந்தம் தேவையான கலோரிப் பெறுமானத்திலும் பல மடங்கு அதிகமாகும். மேலதிகமாக உள்ளெடுக்கப்படும் கலோரி எமது உடலில் கொழுப்பிழையமாக சேமிக்கப்பட்டு உடல் நிறை அதிகரிப்பிற்கு காரணமாக அமைகிறது.


தற்போது பிள்ளைகளின் பொழுதுபோக்குகளாக தொலைக்காட்சி பார்த்தல், கணனி விளையாட்டுக்களில் ஈடுபடுதல், கைத்தொலைபேசி பாவனை போன்றனவே காணப்படுகின்றன. இதனால் பெரும்பாலான நேரத்தை ஓரிடத்தில் இருந்தவாறே செலவழிக்கின்றனர். இதன் போது அவர்களது உடலில் இருந்து இழக்கப்படும் கலோரியின் அளவும் குறைவாகவே உள்ளது.

உடற் பருமனடைதல் நோயினால் பிள்ளைகள் உடல், உள பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். உடற் பாதிப்புகளாக நீரிழிவு நோய், உயர் குருதி அமுக்கம், இதய நோய்கள், ஈரல் மற்றும் சிறுநீரகத்தில் ஏற்படும் பாதிப்புகள், என்புக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள், கூனல் ஏற்படல், தூக்கத்தில் மூச்சுத் திணறல், பித்தப்பையில் கல் உருவாதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். உளப் பாதிப்புகளாக மன அழுத்தம், தன்னம்பிக்கை குறைவடைதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

உடற்பருமனடைதல் நோயானது தடுக்கப்படக் கூடிய ஒன்றாகும் இதற்கான நடவடிக்கைகளை வீடு, பாடசாலை, சமூகமட்டம் என்பவற்றிலிருந்தே ஆரம்பிக்கலாம். பிள்ளையின் உடற்பருமனடைதல் தாயின் கர்ப்பத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. இதனால் கர்ப்பம் தரித்த நாளில் இருந்தே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

கர்ப்ப காலத்தில் ஏற்படும் சலரோக நோயை தகுந்த கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், அநாவசியமாக தாய்ப்பால் தவிர வேறு பால்மா வகைகளை கொடுப்பதை தவிர்த்தல், இனிப்பான உணவுகளை அதிகளவில் கொடுப்பதை தவிர்த்தல் என்பவை ஆரம்பத்தில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் ஆகும்.

வீட்டில் உணவு வேளையில் மாத்திரம் உணவுண்ணல், உணவு உண்ணாது இருப்பதை தவிர்த்தல், முக்கியமாக காலை உணவு, உணவுண்ணும் போது தொலைக்காட்சி பார்ப்பதைத் தவிர்த்தல், அளவுக்கதிகமாக இனிப்பு வகைகளையோ, குளிர்பானங்களையோ வழங்குவதை தவிர்த்தல். குழந்தைகள் தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தையும், கண்னி தொலைபேசி போன்றவற்றில் விளையாட்டுக்களில் ஈடுபடும் நேரத்தையும் மட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.



பாடசாலைகளில் இனிப்பு வகைகள், குளிர்பான வகைகள் என்பன விற்கப்படுவதை தவிர்த்தல். பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கம், வாழ்க்கை முறை என்பவற்றை பற்றி

# ஒப நத்துவா ஒப எக்கா

– யுவகிருஷ்ணா –

மனவோட்டத்தை ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணின் வழியாக ஆராய்கிறது. மனரீதியாக மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிட்ட பிரிவினையை கவலையோடு காண்கிறது. அன்பு, பிளவுகண்ட மனங்களுக்கு மத்தியிலான பாலமாக அமையலாம் என்கிற யோசனையை முன்வைக்கிறது.

இந்தப் படத்தை போய் எந்த இயக்கம் திரையிடக்கூடாது என்று எதிர்த்தது என்று தெரியவில்லை.

சிங்களவர்களுக்கு போர் குறித்த குற்றவுணர்ச்சி நிச்சயம் உண்டு. ஆனால் தமிழர்களோடு அவர்கள் சகஜமாகவே வசிக்க விரும்புகிறார்கள் என்கிற செய்தியை உலகத்துக்கு அறிவிக்க பிரசன்ன இப்படம் மூலமாக விரும்புகிறார் என்று புரிந்துகொள்ள முடிகிறது. நியாயமாக பார்க்கப்போனால் இணையத்தளங்களில் வாய்கிழியப் பேசும் புலம்பெயர் தமிழர்களோ, போராட்டங்களில் கூலிங் கிளாஸ் போட்டுக்கொண்டு போட்டோவுக்கு போஸ் கொடுக்கும் தமிழகத் திரைப்பட கலைஞர்களோ இதை செய்திருக்க வேண்டும்.

[illegible]னாலும், நம்முடைய தனிப்பட்ட [illegible]ரசியல் விருப்பு வெறுப்பு [illegible]ால்களின் படி பிரசன்னவின் [illegible] படத்தைத்தான் நாம் [illegible]திரியெல்லாம் விமர்சிக்க மட்டும்தான் முடியும். அவருடைய கலை உள்ளத்தை மரியாதையோடே அணுகுவதுதான் பண்பாடு.

தமிழர்கள் மீது நம்பிக்கை வைத்து தமிழகத்துக்கு வந்து தன் படத்தை திரையிடுகிறார். தமிழ் ஸ்டுடியோ ஏற்பாடு செய்திருந்த திரையிடல் நிகழ்வில் அர்த்தமற்ற கேள்விகளையும், பிரசன்னவுக்கு நேரடித் தொடர்பில்லாத அரசியல் விளக்கங்களையும் தமிழகத்து தமிழ்த் தேசியப் போராளிகள் கேட்டு, தம்முடைய அறிவீனத்தை உலகறிய செய்துவிட்டார்கள்.

"2009இற்கு பிறகு தமிழீழத்தில் எத்தனை அத்துமீறல்கள் நடந்திருக்கிறது என்கிற ஆவணம் மொத்தமாக என்னிடம் இருக்கிறது. இதை நீங்கள் படித்திருக்கிறீர்களா? இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?" என்று கையில் ஃபைலை வைத்துக் கொண்டு ஒருவர் பிரசன்னவை கேட்டார். இதற்கு சினிமா இயக்குனரான பிரசன்ன என்ன பதில் சொல்ல முடியுமென்று தெரியவில்லை. அவர் என்ன அதிபர் ராஜபக்ஷவா?

அடுத்து ஒரு போராளி, "இலங்கையில் நடந்தது போர்க்குற்றம் என்று நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழர்களுக்கு தனி ஈழமே தீர்வு என்று அறிவிக்க வேண்டும்" என்று கேள்வி(!) கேட்டார்.

மைக்கை பிடுங்கிய ஜிலுஜிலு சிவப்புச் சட்டைக்காரர் ஒருவர் தான் மூன்று கேள்விகள் கேட்க இருப்பதாக படுமோசமான உடைந்த ஆங்கிலத்தில் ஆரம்பித்தார். சுமார் பத்து நிமிடங்களுக்கு இயக்குனருக்கும், பார்வையாளர்களுக்கும் பெரும் ரோதனையாக அவருடைய பேச்சு அமைந்தது. "கொஸ்டின் நம்பர் ஒன்" என்று அவர் ஆரம்பித்தபோது அவரிடமிருந்து மைக் பிடுங்கப்பட்டது.

இதே பாணியில் ஆங்காங்கே இருந்து போர்க்குரல் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. ஒருவர் "ஏன் படம் முழுக்க பின்னணியில் எல்.ஆர்.ஈஸ்வரியின் தமிழ்ப் பாடல்கள் ஒலிக்கிறது என்கிற அரசியலை தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டு செமையாக அசத்தினார்.

படம் பார்க்க வந்த ஈழத்தமிழர்கள் பெரும்பாலானோர் இயக்குனருக்கு ஆதரவாக குரல் கொடுத்தார்கள். அம்மாதிரி பேசிக்கொண்டிருந்த ஒரு பெண்மணியைப் பார்த்து சேகுவேரா மாதிரி ஆவேசமாக இருந்த தோழர் ஒருவர் சொன்னார். "போயும் போயும் உங்களுக்கு போய் இங்கே ஸ்ட்ரைக்கெல்லாம் பண்ணி போராடினோமே? நாடு விட்டு நாடு வந்த உங்களுக்கு எங்களோட அருமை எப்படி தெரியும்?"

வாழ்க பிரபாகரன். மலர்க தமிழீழம்!

# பிறகு

– அருண்.மோ –




புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் தஸ்தாயெவ்ஸ்கியின் "A Gentle Creature" நாவல் மூன்று கலைஞர்களால் திரைப்படமாக்கப் பட்டிருக்கிறது. அதில் ஒன்று றொபேர்ட் ப்ரெசன் இயக்கத்தில் வெளியான "A Gentle Women" திரைப்படம்.

அடுத்து மணி கவுல் இயக்கத்தில் இதே நாவல் "நசர்"(1991) என்ற தலைப்பில் ஹிந்தித் திரைப்படமாக வெளியானது. றொபேர்ட் ப்ரேசனின் கதாநாயகிக்கும், மணி கவுலின் கதாநாயகிக்கும் இடையேயான வேறுபாட்டை நுட்பமாகக் கவனித்தால் இரு வேறுபட்ட கலாசார மையத்தையும் நம்மால் விளங்கிக்கொள்ள முடியும்.

தற்போது பிரசன்ன விதானகேவின் இயக்கத்தில் "பிறகு" (With you without you) என்ற தலைப்பில் மீண்டுமொரு முறை உயிர்பெற்றிருக்கிறது தஸ்தாயெவ்ஸ்கியின் நாவல். றொபேர்ட் ப்ரெசன், மணி கவுல் இருவரின் திரைப்படத்திலும் இல்லாத ஒரு நெருக்கத்தை இந்தத் திரைப்படம் தமிழ்ப் பார்வையாளர்களுக்குக் கண்டிப்பாகக் கொடுக்கும். மாபெரும் காதல் காவியமாக விரிந்த நாவலுக்குள், அரசியலை நுட்பமாக உட்புகுத்தி, அதனைத் தன்னுடைய மண் சார்ந்து அடையாளப்படுத்தியிருக்கிறார் விதானகே.

அடகுக்கடை வைத்திருக்கும், சிங்கள இனத்தைச் சேர்ந்த சரத்சிறி, செல்வி என்கிற தமிழ்ப் பெண்ணைக் காதலித்து மணக்கிறார். திருமணத்துக்குப் பிறகு தன்னுடைய கணவன் ஒரு முன்னாள் இராணுவ வீரன் என்கிற உண்மை தெரிந்ததும், இருவருக்கும் இடையே ஏற்படும் உறவுச் சிக்கல்தான் கதை.

தன்னுடைய கணவன் முன்னாள் இராணுவ வீரன் என்பதை செல்வி தெரிந்துகொள்ளும் இடத்தைவிட, அவன் ஏன் இராணுவத்தை விட்டு விலகினான் என்கிற உண்மையைத் தெரிந்துகொள்ளும் இடத்தில் செல்விக்கு ஏற்படும் கொந்தளிப்பும், ஆற்றாமையும் ஒரு போரின் வலியை மிகத் துல்லியமாகப் பதிவு செய்கிறது. அரசு இயந்திரத்தின் அசுரத்தனமான செயல்பாடு, இராணுவத்தின் நடவடிக்கை இதெல்லாம் தனிமனித உறவுகளை எவ்விதம் சீரழிக்கின்றன என்பதற்கு இந்தக் காட்சிதான் சான்று.

எந்த இடத்திலும், கழிவிரக்கத்தைக் கோராமல், படைப்பு அதன் படைப்புத் தன்மையையும், கதைத் தன்மையையும் இழக்காமல் பார்வையாளரை வருந்தச் செய்கிறது.

சிங்களப் பேரினத்தின் அடுத்தடுத்த சந்ததிகள் இந்தத் திரைப் படத்தைப் பார்க்கும்போது, அவர்களுக்கு ஏற்படக்கூடிய குற்ற உணர்ச்சியே, இந்தப் படைப்பின் ஆகப்பெரும் வெற்றி. போர்க் காட்சிகள் இல்லை, போர் அரசியல் பற்றிய வசனங்கள் இல்லை. ஆனால் போர் பற்றி, அதன் அரசியல் தன்மை பற்றி, காதலின் வழியே மிக சிறப்பான படிமங்களால் நம்மை அதிரச்செய்கிறது இந்தப் படம். அங்கே போர் நடந்து கொண்டிருக்கும்போது கூட, நகைச்சுவை, கேளிக்கை எனச் சினிமாவைப் பயன்படுத்திக்கொண்டிருந்த தமிழ்நாட்டுத் திரைப்படக் கலைஞர்கள் அவசியம் இந்தப் படத்தைப் பார்க்க வேண்டும்.

இந்தியாவில் வாழும் தமிழர்களின் ரசனையை மட்டுமல்ல, உலகம் முழுக்க வாழும் ஒட்டுமொத்த தமிழர்களின் ரசனையையும் தமிழ்ச் சினிமா பாழ்படுத்தியிருக்கிறது. அதற்கு இந்தப் படத்தின் பின்னணியில் ஒலிக்கும் தமிழ்ப் பாடல்களும், செல்விக்கு மிகப் பிடித்த தமிழ்க் கதாநாயகர் பற்றிய காட்சிகளுமே சான்று. தமிழர்களின் வலியைக் கூட, இன்னொரு மொழி பேசும் கலைஞன்தான் பதிவு செய்ய முடிகிறது.

அறிவூட்டல், பிள்ளைகளை விளையாட்டுக்களில் ஆர்வமூட்டல் ([illegible]க்கியமாக பருமனான [illegible]ளைகளை) என்பவற்றை மேற்கொள்ளலாம்.

சமூக மட்டத்தில் பொதுவான விளையாட்டுத் திடல்களை உருவாக்கி விளையாட்டுக்களில் ஆர்வமூட்டல், ஆரோக்கியமான உணவுகளையும் பழவகைகளையும் விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களை ஊக்குவித்தல், போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

பருமனான பிள்ளைகள் அழகாக இருக்கின்ற போதிலும் அவர்கள் வளர்ந்த பின்னும் அதிக உடற்பருமனை கொண்டவர்களாக காணப்படுவதுடன், சிறு வயதிலிருந்து உடலில் ஏற்படும் மாற்றங்கள் நீண்டகால நோய்களையும் பல்வேறான உடல் சம்பந்தமான பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றது.

இதனால் சிறு பிள்ளைகளில் ஏற்படும் உடற் [illegible]னடைதல் எனும் நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து வைத்திய ஆலோசனைப்படி நிவர்த்தி செய்தல் வேண்டும்.

# லிங்கனின் மதி நுட்பம்!



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் வழக்கறிஞராக பணியாற்றிய சமயம், ஒரு ஏழை விதவைப் பெண், அவரை சந்தித்து, தன் மகன் ஒரு கொலை வழக்கில் சிக்கிக் கொண்டதாகவும், நிரபராதியான அவனுக்கு, மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகவும், அவனுக்காக வாதாட வேண்டும், என்று வேண்டுகோள் விடுத்தார். ஏற்கனவே இச்செய்தியை

செய்தித்தாளில் படித்திருந்த லிங்கன், அப்பெண்மணியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார்.

நீதிமன்றத்தில் கொலையை நேரில் பார்த்த சாட்சியை, குறுக்கு விசாரணை செய்யத் துவங்கிய லிங்கன், 'நீங்கள் தானே, கொலையை நேரில் பார்த்தவர்...' என்று கேட்டார்.

'ஆம்!' என்றான் சாட்சியாளன்.

'கொலை நடந்த போது நேரம் என்ன?' என்று, லிங்கன் கேட்க, 'இரவு, 10 மணி...' என்றான், சாட்சியாளன்.

உடனே லிங்கன், 'இரவு என்றால், இருளாக இருந்திருக்குமே... நீங்கள் எந்த வெளிச்சத்தில் கொலையை பார்த்தீர்கள், தெரு விளக்கு வெளிச்சத்திலா...' எனக், கேட்டார். அதற்கு அந்த சாட்சியாளன் மிகுந்த ஜாக்கிரதையாய், 'விளக்கு வெளிச்சத்தில் இல்லை; நிலா வெளிச்சத்தில் பார்த்தேன்...' என்றான்.

அவனது கூற்றை உறுதி [illegible]ய்து கொண்ட லிங்கன், நீதிபதியைப் பார்த்து, 'இவர் கூறிய கொலை நடந்த அந்த [illegible]ள், அமாவாசை முடிந்து, ஏழு நாட்களே ஆகியுள்ள முன்னிலவு வளர்பிறை காலம். அக்காலத்தில், நிலவு, இரவில் விரைவில் தோன்றி, விரைவில் மறைந்து விடும் என்பதை வானிலைச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. அதன்படி பார்த்தால், இவர் கொலையை பார்த்த இரவில் நிலவு, 9.00 மணிக்கு மறைந்திருக்கும். நிலவு மறைந்த பின், இருளில் கொலையை மட்டுமல்ல, எதையுமே பார்த்திருக்க முடியாது. எனவே, பொய்ச் சாட்சி கூறும் இவரை தண்டித்து, நிரபராதியை விடுவிக்க வேண்டும்...' என்று கூறினார்.

லிங்கனின் மதி நுட்பத்தால், அந்த ஏழை நிரபராதிக்கு, நீதி கிடைத்தது.

**- லிங்கனின் வாழ்வில்...**

இந்தியா, பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த போது, ஒருமுறை காந்திஜி. சுயராஜ்ய இயக்கத்தை ஆரம்பித்தார். சுயராஜ்ய மந்திரத்தை கிராமம் கிராமமாகப் போய் சொல்ல வேண்டுமென்று, தொண்டர்களுக்குக் கட்டளையிட்டார். அதன்படி நானும், சில கிராமங்களுக்குப் போனேன். அப்படி, ஒரு கிராமத்தில், தண்டோரா அடித்து, "கிராம சாவடிக்கு முன் கூட்டம் நடைபெறும்" என, அறிவித்த பின், குறிப்பிட்ட நேரத்தில், கையில் ஒரு அரிக்கேன் லாம்புடன் சாவடிக்குப் போய் சேர்ந்தேன்.

அங்கே, ஒரே ஒரு நபர் மட்டுமே வந்திருந்தார். அந்த ஒருவராவது வந்திருக்கிறாரே என்ற நன்றி உணர்ச்சியுடன், பிரிட்டிஷ் அரசாங்கம், இந்தியாவில் செய்துவரும் அட்டூழியங்களைப் பற்றி, கேட்பவரின் இரத்தம் கொதிக்கும்படியாக, ஒன்றேகால் மணி நேரம் பிரசங்கம் செய்தேன். பின், நானே வணக்கம் செய்து, உட்கார்ந்திருந்த ஒரே நபரைப் பார்த்து, "ஐயா, தங்களின் தேச பக்தி என்னைப் பரவசப்படுத்துகிறது. தாங்கள் யாரோ, எந்த ஊரோ..." என்றேன்.

அதற்கு அந்த நபர், "என்னைத் தெரியவில்லையா... நான் உம்மை, கோபிசெட்டிப்பாளையத்திலிருந்து, கரூர் வரையில் தொடர்ந்து வந்திருக்கிறேன். நான் சி.ஐ.டி.,காரன் உம்மைக் கண்காணிப்பதற்காக என்னை அனுப்பியுள்ளனர்..." என்றார் அவர்.

**- கல்கி எழுதிய, 'இலங்கையில் ஒரு வாரம்' நூலிலிருந்து.**



# ரசிகர்!





# நிகழ்வுகளின் பதிவுகள்....

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் இவ்வாண்டுக்கான உறுப்பினர்கள் பதவியேற்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது இதன்போது உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்வதையும், உறுப்பினர்களுக்கு பட்டயச்சான்றிதழ் கையளிக்கப்படுவதையும் காணலாம். (01)





பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தின் பவளவிழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், மாணவர்களின் நடன நிகழ்வையும் காணலாம்... (48,63)







சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் பிரத அதிபர் இளையதம்பி ஆனந்த நடராசாவுக்கான மணிவிழா நிகழ்வும் சேவை நலன்பாராட்டும் அண்மையில் இடம்பெற்றபோது விழா நாயகன் தம்பதிகள் சகிதம் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்படுவதைக் காணலாம். (66)

நல்லூர் அருள்மிகு ஸ்ரீஇராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சைவ சமய அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆலயக்குருக்கள் பிரம்மஸ்ரீ வ. திவாகரேஸ்வரக் குருக்கள் மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம்.(48)









குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தால் மாற்றுவலுவுடையோருக்கான ஆதரவு சர்வதேச தினம் அண்மையில் ஆனையிறவு தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இதில் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டப்படுவதையும் மரம் நடுகை செய்யப்படுவதையும் காணலாம். (90)

# சிகிச்சை பெறுவதில் காத்திருப்பு

# விசனமடையும் நோயாளர்கள்

## - கிளிநொச்சி வைத்தியசாலையில் அவலம்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தற்போது நோயாளர்களின் வீதம் அதிகரித்துள்ளதாலே சிகிச்சை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் உரிய நேரத்துக்கு சமூகமளிக்கத் தவறுவதாகவும் அங்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் ஒருநாள் முழுவதும் காத்து நின்றே சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டுமென நோயாளிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு ஒரு நாள் முழுவதும் சிகிச்சைக்காக தங்கி நின்றாலும் தமது நோய் அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வைத்தியரால் வழங்கப்படும் மருந்தின் அளவினை விட மருந்தாளர்கள் தமக்கு தெரிந்தவர்கள் வைத்தியசாலைக்கு வரும் போது அளவிற்கு அதிகமான மருந்துகளைக் கொடுப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியரின் அறிவித்தல் இன்றி இவ்வாறு மருந்தாளர் மருத்துகளை அளவுக்கதிகமாக கொடுப்பதால் நோயாளர்கள் அளவிற்கதிகமாக உட்கொள்கின்றனர். இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் கனவமெடுத்து இச்செயற்பாட்டை கவனிப்பார்களானால் நோயாளர்கள் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (77)

# கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட பின்தங்கிய நவாலி கிராமத்தில் இருந்து முதன்முதலாக எம்.பி.பி. எஸ். டாக்டர் பட்டத்தைப் பெற்ற ஜெயராஜா றஜீவன் பொன்னாடைபோர்த்தி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

44 ஆவது ஆண்டு பூர்த்தி விழா நவாலி சிந்தாமணிபிள்ளையார் ஆலய வீதியில் இடம்பெற்றது.

நிலையத்தலைவர் கந்தையா தனபாலசிங்கம் நவாலி மண்ணின் முதல் முதலாக படித்து வைத்தியரான ஜெ.றஜீவனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் பெறுமதி வாய்ந்த விருதும் வழங்கிக் வைத்தார். இந்நிகழ்வின் போது உதவிப்பிரதேச செயலர் திருமதிநே.செல்வக்குமாரி, கிராம அலுவலர் க.தனபாலரத்தினம், உறுப்பினர் க.கௌரிகாந்தன், உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ், பொதுசுகாதார பரிசோதகர் க.பரமேஸ்வரன், அதிபர் க.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர். (92)

# கால்நடைகள் திருட்டு

(அச்சுவேலி)

குடாநாட்டில் உள்ள பல கிராமங்களில் தற்போது கால்நடைகள் இனந்தெரியாதோரால திருடப்பட்டு வருவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேய்ச்சலுக்காக கட்டி விடப்படும் இடங்களிலேயே கால்நடைகள் திருடப்படுவதாகவும் இதனால் தமக்கு பாரிய நஷ்டம் ஏற்படுவதாக கால்நடை வளர்ப்போர் தெதரிவிக்கின்றனர்.

பல்வேறு சிரமத்தின் மத்தியில் கால்நடைகளை வளர்த்து பராமரித்து வருமானம் பெறும் நேரத்தில் இத்திருட்டுக்கும்பல் செய்யும் நாசகாரவேலையால் தம் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு திருடப்படும் கால்நடைகள் இறைச்சிக்காக அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (85)

# வடமாகாணத்தின் சிறந்த கலைஞர்களுக்கு விருதுவழங்கலும் கௌரவிப்பு நிகழ்வும்



வடமாகாண பாரம்பரிய கலை நிகழ்வுகளை மேடையேற்றும் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாணத்திலுள்ள சிறந்த கலைஞர்களை தெரிவு செய்து அவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வும், கௌரவிப்பும் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இலங்கைவேந்தன் கலையரங்கில் இடம்பெற் றது.

இந்நிகழ்வில் வடமாகாணத்திலிருந்து சிறந்த கலைஞர்களை திறமை அடிப்படையில் தெரிவு செய்து அவர்களை ஊக்கப்படுத்தும் நிகழ்வாகவும் இது அமைந்துள்ளது.

மேலும் இந்த நிகழ்வில் வடமாகாணத்தில் மிகச்சிறந்த படைப்புக்களாகத் தெரிவு செய்யப்பட்ட நாடகம், கூத்து, ஆகியவை மேடையேற்றப்பட்டு அவர்களுக்கான விருதுகளும், கௌரவிப்பும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், மற்றும் வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். (48)




வடமராட்சி இந்து. மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் திருமதி தேவராணி நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மாணவிக்கு பரிசில் வழங்குவதைக்காணலாம்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

எங்கள் சிறிய குடும்பத்திற்கு நாங்கள் இருவரும் வேலைக்குச் செல்வதால் வீட்டை சுத்திகரிப்புச் செய்து கொண்டு வீட்டில் ஒருவரைப்போலிருக்க 30 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். சம்பளம் 18,000-25,000 தொடர்புக்கு 0315676004, 0712886901.

---

வைத்தியரின் வீட்டுக்கு 3வயது குழந்தையை பராமரித்து கொள்வதற்கு 20 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. வட கிழக்கு விரும்பத்தக்கது. குடும்பத்தில் ஒருவரைப்போல் பராமரிக்கப்படுவார் தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். தொடர்புக்கு 0314938025, 0759600277.

---

இஸ்லாமிய மார்க்கப்பற்றுடைய 20 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. நாங்கள் வெளிநாடு செல்ல விருப்பதால் எனது தாயாருடன் 12வயது குழந்தையை பார்த்துக்கொண்டிருப்பதற்கு (குடும்பத்தில் ஒருவரைப் போல் பராமரிக்கப்படுவார். தொடர்புக்கு 0113053387, 0727944586.

---

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யமான கோழிப் பண்ணைக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. தொடர்புக்கு 0777048972.

---

கனடாவில் இருந்து வந்திருக்கும் இரு தமிழ் பெண்களுக்கு மட்டும் சமைத்துக்கொடுப்பதற்கு பணிப்பெண் ஒருவரை உடனே எதிர்பார்க்கின்றோம். சம்பளம் 17,000 தனி அறையுடன் (வெள்ளவத்தை) தொடர்புக்கு 0724581732, 0112363279.

---

நம்பிக்கையுடன் கை கோருங்கள் உங்களது ஊர்களில் இருக்கும் எமது ஆட்சேர்ப்பு நிலையங்கள்(மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, கதுருவெல, ஹட்டன், கண்டி, பண்டாரவளை) பிரசித்திபெற்ற தொழிற்சாலைகளில் தரம் பிரித்தல், உற்பத்தி, பொதியிடல் கொழும்பை அண்மித்த பகுதிகளில் ஜேம்,பிஸ்கட் காமண்ட், பால்மா, சொக்லேட் PVC சிக்கன், டிபேக், Delivery போன்ற வற்றிற்கு ஆட்கள் தேவை. வயது 17-50 சம்பளம் 18,000-25,000 (மூன்று மாதத்திற்கு பிறகு 30.000 ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக்கொள்ளப்படுவர் உணவு, தங்குமிடம் சகாய விலைகளில் தொடர்புக்கு 0774312176.

---

இன்பமான நாளைய வாழ்வுக்கு இன்றே நிரந்தரத் தொழில் (தமிழ், முஸ்லிம், இளைஞர், யுவதிகளுக்கு முன்னுரிமை) பிரதான தொழிற்சாலைகளான டொபி, சொக்லேட் ஜேம், கிளவுஸ் வாசனைத் திரவியம், பால்மா, PVC தேயிலை போன்றவற்றிற்கு உற்பத்தி லேபல், பொதியிடல், களஞ்சியப் பிரிவுக்கு 17-50 ஆண்,பெண் தேவை நம்பிக்கையூட்டும் வகைகளில் உணவு, தங்குமிடம் சகாய விலைகளில் (குழுக்கள், தம்பதிகள், நண்பர்கள ஒரேதொழிற்சாலைகளில் சம்பளம் 19,000-26,000-35,000 வருகை அன்றே தொழில்வாய்ப்பு. 0776338231.

---

இதோ அரிய வாய்ப்பு உணவு, தங்குமிடம் இலவலமாக வழங்கப்பட்டு எமது பிரதான தொழிற்சாலைகளுக்கான வேலை வாய்ப்பினை இன்றே பெற்றுக்கொள்ளுங்கள். ஆண்களை மட்டும் எதிர்பார்க்கின்றோம். (17-50)இடைப்பட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும் 25.000-45,000 சம்பளத்தினைப் பெற்றுக் கொள்ளலாம் இன்றே அழைப்புக்கு முந்துங்கள் 0779005630, 0712064012.

---

உணவகத்திற்கு சைனிஸ் மற்றும் மொன்கோலியன் வேலை தெரிந்த அனுபவமுள்ளவர்கள் தேவை. உணவு, தங்குமிடம் என்பவற்றுடன் நாள் சம்பளம் 1300 ரூபா Ben Foods இல 340 நீர்கொழும்பு வீதி வெலிசர 0779193093.

---

உங்களுக்கு இலகுவில் வேலைவாய்ப்புப் பெற எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள், (நுவரெலியா, ஹட்டன், மட்டக்களப்பு, அனுராதபுரம், வவுனியா, கொழும்பு போன்ற இடங்களில் எமது காரியாலயங்களுடன் தொடர்புகொண்டு O/L,A/L சித்தி பெற்றவர்களுக்கான தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு ஏனையவர்களுக்கு எமது உற்பத்திகளான ஜேம், கோடியல், PVC, தேயிலை போன்ற உற்பத்தி, லேபல், பொதியிடல் மற்றும் தனியார் துறைமுகம், விமான நிலையத்திலும், வேலைவாய்ப்புக்கள் உண்டு உணவு, தங்குமிடம் சகாய விலையில், சம்பளம் 18,000-48,000 வரை வருகைதரும் நாளிலே வேலைவாய்ப்பு 0778176234.

# சப்பர வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம்-மயிலணி அருள் மிகு கந்தசாமி கோவிலுக்காக புதிதாக வடிவமைக்கப்பட்ட பஞ். சவர்ண சம்பரம் இன்று வெள் ளோட்டமாக வீதியுலா வருகிறது.

இன்று முற்பகல் 11 மணியளவில் இந்த வெள்ளோட்ட விழா இடம்பெறவுள்ளது. இவ் விழாவில் சமயாசார மற்றும் ஆகம விதிப்படி நிகழ்வுகள் இடம பெறவுள்ளன. அதேவேளை எதிர்வரும் புதன்கிழமை சப்பறத் திருவிழா மிக கோலாகலமாக இடம்பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மீனின் விலை திடீர் உயர்வு வானிலை மாற்றம் காரணமா?



(கொழும்பு)

அண்மைக்காலமாக கடற் பிராந்தியங்களில் நிலவும் வானிலை மாற்றமே மீன் விலையேற்றத்திற்கு காரணமென இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மீன் விற்பனை நிலையங்களில் குறிப் பிடத்தக்களவு விலை மாற்றம் ஏற்படவில்லை என கூட்டுத்தாபனத்தின தலைவர் மகில் சேனாரத்ன கூறியுள்ளார்.

மீன் வகைகளின் விலை அதிகரித்துள்ளதால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். பேலியகொடை மொத்த சந்தையில் ஒரு கிலோ கிராம் பாரை மீன் 1,400 ரூபா விற்கு விற்கப்படுவதுடன் ஒரு கிலோகிராம் தலபத் மீனின் விலை 520 ரூபாவாக அமைந்துள்ளது.

ஒரு கிலோகிராம் மஞ்சள் சூரை மீன் 520 ரூபாவுக்கும் சூரை மீன் ஒரு கிலோகிராம் 400 ரூபாவுக்கும் பேலியகொடை மீன் சந்தையில் விற்கப்படுகிறது.



## பரமர் சங்கமம்

'வலியப் போகக் கூடாது' வந்தால் விடக்கூடாது இந்தத் தார்ப்பரியந்தான் பரமருக்கு இந்த வசனத்தை நினைத் தோடனம் எனக்கு நடிகர் சிவாஜிகணேசன் நடித்து அந்த நாளேல வெலிங்டன் தியேட்டரில் ஒரு வருடமாக திரையிடப்பட்ட 'வசந்தமாளிகை' படத்தில் கணேசன் பேசிய பஞ் வசனந்தான் மூளேல ஓடிவருகுது.

சரியெண்டா ஆரெண்டாலும் விடக் கூடாது விரும் பாட்டால் விலை மாதெண்டாலும் தொடக்கூடாது அந்தப் பஞ்வசனம் இது தான்.

இந்தச் சம்பவம் யாழ்.நகர் வர்த்தக நிலையமொன்றில் பரமருக்கே நடந்தது பால்மாபொதி ஒண்டை வாங்கப் போனன் கடைமுதலாளி எனக்கு வேண்டியவர் பொதியில் பொறிக்கப்பட்டிருந்த விலையில் இருந்து பத்து 'ரூபா அதிகமாகக் கோரப்பட்டது.

இவ்வளவு தானே போட்டிருக்கு என்ன கூட எடுக்கிறீங்க எண்டன்.காசாளர் திமிரோடு பெட்டீல நூறு ரூபாவும் போட்டி ருக்கும் அந்த விலைக்குத் தரமுடியுமே எண்டார்.

கடைக்காற முதலாளி என்ர கூட்டாளி எண்டன். அவர் சும்மாவும் தருவார் எண்டதும் எனக்குப் பிடிக்கேலை பேப்பர்காரன் பேப்பரில போடுவன் எண்டன் வடிவாப் பொடெண்டார் வந்திட்டன். என்ர செய்தியள நண்பர் களுக்குச் சொன்னால் கேக்க வேணுமா? வழக்கம் போல அந்தக் கடைக்குப் போன போது முதலாளி செய்தி வந்தே பற்றிக் கேட்டார் நானெழுதேல்ல எண்டன் இல்ல கந்தோரில பொடியள் போய்க் கேக்க நீர்தானெண்டு சொன்னதாம் எண்டார்.

என்னை உங்களுக்கு நல்ல பழக்கந்தானே என்க ஓமெண்டார். அந்தச் செய்தி எழுதியவரைப் புடிக்கேலாது எண்டன் அவங்களுக்குப் பேப்பரில போடு வனெண்டு சொன்னீர்தானையெனக் கேட்டார்.

சொன்னாப் போல எழுதிறதோண்டன் அவர் சிரிச்சு விட்டு உந்துருளியில் போய்விட்டார் போனதும் காசாளர் உனக்கு எங்களால என்னென்னவோவெல்லாம் செய் யலாம் நீ க்கப்பமே கேக்கிறமெண்டார்

எனக்குப் பயம் சூழ்ந்து கொண்டது அவங்கட கையாட் களை வைத்து என்னைக் கப்பம் கேட்டதாக பொலிஸில் ஒப்படைச்சால் யோசிச்சுப் போட்டு இன்னும் என்னெல்லாம் சொல்லப் போறாயெண்டு கேட்டன் அவனுக்குப் பின்புதான் பாவிச்ச வசனம் தப்பான கற்பித்ததைக் கொடுத்தைத் தெரிந்து விலையில் கூட்டி எடுப்பதாக நான் கூறிய பத்து ரூபாவை கப்பம் கேட்டமாகச் சொன்னான்.

உன்னுடைய கதைதான் சரியில்லை. கதைக்கப் பேச உனக்குத் தெரியாத? உன்னாலை செய்யேலுமெண்டாச் செய்து பார் என்னைப் பற்றிக உனக்குத் தெரியாது அப்புடி இப்புடியெண்டு பேசிப்போட்டு வந்திட்டன்.

இந்தச் சம்பவம் கூட்டாளியான முதலாளிப் பொடியன் அறிஞ்சா என்ன நினைப்பான்? அதுக்காக ஒருவருடைய சுயமரியாதையில் கைவைத்தால் விடேலுமே வலியப் போகக் கூடாது வந்தால் விடக்கூடாதெண்ட பரமரின் புடிவாதம் சரியோ புளையோ சொல்லுங்கவன் பாப்பம்...

# முஸ்லிம்களுக்கு எதிரான அத்துமீறல்

# முஸ்லிம் காங்கிரஸ் சட்ட நடவடிக்கைக்கு முஸ்தீபு



(கொழும்பு)

அரச ஆதரவுக் குழுக்களின் அத்துமீறல்களுக்கு எதிராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்து வருகிறது.

அளுத்கம சம்பவம் தெடர்பில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமையவில்லை என தெரிவித்துள்ளது.

எனவே, அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய கட்சி தீர்மானித்துள்ளது.

வழக்குத் தொடர்வதற்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

சமூகத்தின் உரிமைகளை உறுதி செய்ய வேண்டியது கட்சியின் தலையாய பொறுப்பாகும். இந்த நோக்கத்தின் அடிப் படையில் வழக்குத் தொடரப்பட உள்ளது.

அளுத்கம சம்பவம் குறித்து பொலிஸார் நடாத்தி வரும் விசாரணைகளில் நம்பிக்கை கிடையாது என அவர் குறிப் பிட்டுள்ளார்.

ஞாயிறு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# சிறுவர் துஷ்பிரயோகம் வெளிநாட்டு பிரஜைகளுக்கு தடை

## புதிய செயற்றிட்டம் தயார்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகத் துடன் தொடர்புடைய வெளிநாட்டவர்கள் இலங் கைக்குள் பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் விசேட செயற்றிட்டமொன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாடுகளுடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அதிகார சபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்றிட்டம் காரணமாக அண்மையில் சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் தொடர்பு டைய வெளிநாட்டவர்கள் நாட்டுக் குள் பிரவேசிப்பதை தடுப்பதற் கான சந்தர்ப்பம் கிடைத்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

இணையத்தளம் உள்ளிட்ட பல்வேறு வழிகளைப் பயன்படுத்தி சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு தூண்டப்படுகின்றமை தொடர்பி லும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தகவல் கிடைத் துள்ளது.

இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபடுவோரிடமிருந்து பிள்ளை களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உள்ள தாக அதிகார சபையின் தலை வர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஒன்றிணைந்து செயற்பட ரணில் கோரிக்கை



நாட்டை முன்னேற்றுவதற்கு அனைத்து இன மக்களும் ஒன்றிணைய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலைகளில் இருந்து மீள வேண்டிய தேவை மக்களுக்கு இருக்கிறது.

இதற்காக தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும.

இந்த நிலையில் நாட்டின் மீட்சிக்காக, நாடு முழுவதும் வெற்றிப் பிரார்த்தனைகளை நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர குறிப்பிட்டுள்ளார்.

# தயாராகிறது தேர்தல் வியூகம் ஆளும் கட்சி களத்தில்

அடுத்த ஆண்டில் இடம் பெறும் என்று எதிர்ப்பார்க்கப் படும் தேர்தல்களுக்காக ஆளும் கட்சி தயாராகி வருகி றது இதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக இன்று ஜனாதிபதியின் தலை மையில் விசேட மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

அரசாங்கத்தின் சகல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கான தெளிவூட்டல் மாநாடு ஒன்று நாளை ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

பேருவளையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக மாகாண முதலமைச் சர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் தேசிய தேர்தல் மற்றும் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை பொது மக்களிடம் எடுத்துச் செல்லும் முறைகள் தொடர்பில் இதன் போது தெளி வுபடுத்தவுள்ளதாகக் கூறப்படுகிறது

# நல்லிணக்க முயற்சிகளில் மீண்டும் தென்னாபிரிக்கா

அமைதி மற்றும் நல்லி ணக்க முயற்சிகளை ஆரம்பிப் பதற்காக, தென்னாபிரிக்கா வின் பதில் அதிபர் சிறில் ரமபோசா, இன்னும் பத்து நாட்களுக்குள் கொழும்புக்குச் செல்வார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைதி, நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தென்னாபிரிக் காவின் முயற்சியின் ஒரு கட்டமாக, வரும் யூலை 7ஆம் நாளுக்கும், 9ஆம் நாளுக்கும் இடையில், எந்த நேரத்திலும் தென்னாபிரிக்க பதில் அதிபர் ரமபோசா கொழும்பு செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிலங்காவுக்கான சிறப்புத் தூதுவராக சிறில் ரமபோ சாவை கடந்த பெப்ரவரி மாதம், தென்னாபிரிக்க அதி பர் ஜேக்கப் சூமா நியமித் திருந்தார்.

தற்போது ரமபோசா, தென்னாபிரிக்காவின் பதில் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா நல்லிணக்க முயற் சிகளில், ஒரு நாட்டின் பதில் அதிபர் பங்கு கொள்வது இதுவே முதல் முறையாகும். சிறில் ரம போசாவுடன், உயர்மட்டக் குழு வொன்றும் கொழும்பு வரவுள்ளது.

அந்தக் குழுவில், அனைத் துலக உறவுகளுக்கான முன்னாள் பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற கவுன்சிலருமான இப்ராகிம் இஸ்மாயில் இப்ராகிம், ஆற்றல் கண்காணிப்பு, மதிப்பீட்டு, நிர்வாக பிரதி அமைச்சர் றோல்ப் மேயர், மற்றும் ஆலோசனை நிபுணர் ஐவர் ஜெனிங்ஸ் ஆகியோரும் இடம்பெறவுள்ளனர்.

இலங்கையின் அரசாங்கத் தலைவர்கள், மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐ.தே.க. தலைவர்கள், சிவில் சமூக குழுக்களின் பிரதிநிதிகளை சிறிலங்காவில் சந்தித்துப் பேச



சிறில் ரமபோசா திட்டமிட்டுள் ளார்.

கொழும்பு பயணத்தை முடித்துக் கொண்டு, புதுடில்லி செல்லவும் தென்னாபிரிக்க குழு திட்டமிட்டுள்ளது.

எனினும், புதுடில்லிச் சந் திப்புகள் தொடர்பாக இன்னமும் உறுதிப்படுத்தப்பட வில்லை என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

**கணிதம்**


## பகுதி I (A)

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**


01. 500/= கொள்விலையுடைய பொருள் ஒன்று 800/= ஆக விற்கப்பட்டால் இலாபம் யாது?
02. $3^{-2}$ இன் பெறுமானம் யாது?
03. சுருக்குக. 1/5 + 1/10
04. தீர்க்க 3x-1=8
05. உருவில் x இன் பெறுமானம் யாது?





06. 5 மாணவர்களின் சராசரி நிறை 40 Kg எனின் 5 மாணவர்களினதும் மொத்த நிறை யாது?
07. பின்வரும் எண்கோட்டில் குறிக்கப்பட்ட சமனிலியை எழுதுக?





08 $3x+12x^2$ இதன் பொதுக்காரணியை வேறாக்கி எழுதுக?
09. உருவில் x இன் பெறுமானம்.





10. y= 2x-4 என்னும் நேர்கோட்டு சமன்பாட்டில் படித்திறன், வெட்டுத்துண்டை எழுதுக.
11. காரணிப்படுத்துக. $4x^2-9$
12. பெறுமானம் காண்க. $\log_2 8+\log_4 64$
13. $y=(x+2)^2-4$ என்னும் சார்பின் வரைபின்
    1. சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?
    2. திரும்பற் புள்ளியின் ஆள்கூறு யாது?
14. தரப்பட்ட உருவில் இருந்து பின்வருவனவற்றின் திசை கோளைக் காண்க?
    1. P இலிருந்து Q இன் திசைகோள் யாது?
    3. Q இலிருந்து P இன் திசைகோள் யாது?





15. 6,12,24,..... என்னும் விருத்தியினை அவதானித்து அது
    1. எவ்வகை விருத்தி எனக் கூறுக?
    2. அதன் 5 ஆம் உறுப்பைக் காண்க?
16. -2, 3 ஆகியவனவற்றை மூலகங்களாகக் கொண்ட இருபடிச் சமன்பாட்டை எழுதுக.
17. AB, CD என்பன சமாந்தர நேர்கோட்டுத் துண்டங்கள் எனின் X,Y இன் பெறுமானங்களை காண்க.





18. இரு வட்டங்களின் பரப்பளவுகளுக்கு இடையிலான விகிதம் 2:1 ஆகும். அவற்றின் விட்டங்களுக்கு இடையிலான விகிதங்களைத் தருக.
19. $\frac{a+b}{b} = 3\frac{2}{4}$ எனின் a-b இன் பெறுமானம் யாது?
20. உருவம் ABC செங்கோண முக்கோணி $ABC=30^0$ எனின் இன் AB நீளம் யாது?




21. உருவில் நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது?





22. க.பொ.த (சா/த) பரீட்சை ஒன்றிற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் 5/6 பங்கினர் சித்தியடைந்தனர். சித்தியடையாதோர் 60 பேர் எனின் பரீட்சைக்குத் தோற்றியோரின் மொத்த எண்ணிக்கை யாது?
23. O மையமாகவுடைய வட்டத்தின் நாண் BC ஆகும். வட்டத்திற்கு B யில் வரையப்பட்ட தொடலி PQ ஆகும். $C\hat{B}Q=35^0$ எனின் $C\hat{O}B$ ஐ காண்க?




24 கூட்டுக. $2112_{மூன்று} + 1111_{மூன்று}$

25. 1:4000 என்ற அளவிடையில் வரையப்பட்ட ஒரு அளவிடைப் படத்தில் இரு புள்ளிகளுக்கிடையிலுள்ள தூரம் 30 Cm எனக் காட்டப்பட்டுள்ளது. இவ் இருபுள்ளிகளுக்கும் இடையிலான உண்மைத் தூரத்தை M இல் தருக?
26. குறித்த விலையுடைய பொருள் ஒன்றை 10% நட்டத்துடன் 720 ரூபாவுக்கு விற்கப்பட்டது எனின் 15% இலாபம் பெற அதனை விற்க பண்டிய விலை யாது?
27. $A=\frac{4B}{3}+2$ என்னும் சூத்திரத்தில் B ஐ எழுவாயாக்குக.
28. O என்பது 5Cm ஆரையுடைய வட்ட மையமாகும். X இலிருந்து வட்டத்திற்கு வரையப்பட்ட இரு தொடலிகள் QX.PX ஆகும்.
    1. px=12 cm எனின் OX இன் நீளம் யாது?
    2. முக்கோணி QOX இன் சுற்றளவு யாது?




29. ஒரு குறித்த கம்பனி ஒன்றில் 9000 ரூபாவை முதலீடு செய்து 10000 ரூபா பெயர் மாத்திரைப் பெறுமானம் கொண்ட பங்குகளை குமார் கொள்வனவு செய்தான். அவனுக்குக் கிடைத்த பங்கிலாபம் 2000 எனின் பங்கிலாப வீதம் யாது?
30. $P(A) = \frac{5}{8}$, $n(A) = 5$ எனின் $n(A^1)$ யாது?

## பகுதி I (B)

1) (a) ஒரு பாத்திரத்தின் $^1/_2$ பகுதி நீரினால் நிரப்பப்பட்டுள்ளது. அதிலிருந்து 12 l நீர் அகற்றப்பட்ட போது பாத்திரத்தின் $^1/_5$ பங்கு நீர் எஞ்சியிருந்தது பாத்திரத்தின் கொள்ளளவைக் காண்க?


(b) தங்க நகையொன்றைச் செய்யும் போது செம்பும், தங்கமும் 1:10 என்ற விகிதத்திலும் தங்கமும், வெள்ளியும் 5:2 என்ற விகிதத்திலும் கலக்கப் படுகின்றன.

(i) செம்பு, தங்கம் வெள்ளி ஆகியன கலக்கப்பட்டுள்ள விகிதத்தை எழுதுக?
(ii) 600mg நிறையுள்ள தங்க நகையில் உள்ள தங்கத்தின் நிறையைக் காண்க.
(iii) கலவையிலுள்ள தங்க சதவீதத்தைக் காண்க.

2) ரூபா 5800 விலையுடைய பொருள் ஒன்றை முதலில் 1800 ரூபாவும் மிகுதியை 8 சமமான மாதாந்தத் தவணைகளில் வாடகைக் கொள்வனவு முறையில் செலுத்தி வாங்கலாம் எனின்

1) மாதம் ஒன்றின் கடன் பகுதி எவ்வளவு?
2) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
3) வருட வட்டவீதம் 12 வீதம் எனில் ஒரு மாத அலகுக்கான வட்டி யாது?
4) மொத்த வட்டியைக் காண்க?
5) தவணைக்கட்டணம் ஒன்றின் பெறுமானம் யாது?
6) வாடகைக் கொள்வனவு முறையில் வாங்கிய பொருளை 6 வீத இலாபம் வைத்து விற்றுப் பெற்ற பணத்தைக் கொண்டு ஒருவர் வாடகைக் கொள்வனவு முறையில் வாங்கிய பொருளுக்கான பணத்தைச் செலுத்தினார் எனில் இப்பொருளை வாங்கி விற்பதன் மூலம் எவ்வளவு இலாபத்தைப் பெற்றிருப்பார்?

3)




தரபபட்ட திரள மீடிறன் வளையியைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களிற்கு விடை தருக.

(I) வியாபார நிலையமொன்றில் 30 நாட்கள் விற்கப்பட்ட அரிசியின் அளவு பற்றிக் கீழ்வரும் தரவட்டவணையைப் பூர்த்தி செய்க.


| விற்கப்பட்ட அரிசி (kg) | 90-0 | 0-100 | 100-200 | 200-300 | 300-400 | 400-500 | 500-600 |
|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 2 | — | — | — | — | — | 2 |

(ii) ஒரே நாளில் விற்ற அரிசியின் இடையத்தை காண்க.
(iii) முதலாம் 3ஆம் காலணைகளைக் காண்க.
(iv) காலணை இடை வீச்சைக் காண்க.

4) பையொன்றினுள் 1,2,3,4,5 என இலக்கமிடப்பட்ட ஒரே அளவான அட்டைகள் 5 உள்ளன. இரு அட்டைகள் எழுமாறாக எடுக்கப்பட்டு அதில் உள்ள இலக்கங்களைக் கொண்டு இலக்கங்களினாலான எண் ஒன்று ஆக்கப்படுகின்றது. இந்த நிகழ்வின்

(I) மாதிரிவெளியை புள்ளி வரையொன்றில் காட்டுக.
(II) ஆக்கப்பட்ட எண் ஐந்தின் மடங்காக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.
(III) இரட்டை எண்ணொன்றை பெறும் நிகழ்ச்சி A எனின் n(A) எவ்வளவு?
(IV) P(A) இன் பெறுமானம் யாது?
(V) 50 இலும் அதிகமான எண்ணொன்றைப் பெறும் நிகழ்ச்சியின் நிகழ்தகவு $^1/_5$ என கமல் கூறுகிறான். இவ்விடைக்கு நீங்கள் உடன்படுகிறீர்களா? காரணம் கூறுக.

5)




(i) மாணவன் ஒருவன் பொறியினுள் 5 எனும் எண்ணை செலுத்தும்போது பொறியிலிருந்து வெளியே பெறப்படும் எண்ணை b சார்பில் எழுதுக.
(ii) பொறியினுள் a எனும் எண்ணைச் செலுத்தும்போது வெளியே 1 எனும் எண் பெறப்படின் a,b சார்பில் சமன்பாடொன்றை பெறுக.
(iii) சமன்பாட்டைத் தீர்ப்பதற்கு உகந்த வழியை நீர் பயன்படுத்தி $\frac{a}{b}$ இன் பெறுமானத்தைக் காண்க.

(b) $A=\begin{pmatrix} 4 & 3 \\ 2 & 5 \end{pmatrix}$ $B=\begin{pmatrix} -2 & -1 \\ 0 & 2 \end{pmatrix}$ எனின்

(i) தாயம். A எவ்வகைத் தாயம் எனக் கூறுக.
(ii) A+B ஐக் காண்க
(iii) தாயம் A+C =B எனின் தாயம் C ஐ எழுதுக

# ENGLISH LANGUAGE

**01) Read the text and fill in the blanks in the text. One is done for you.**

Nattaranpota is famous for Brassware. The main ................................ (occupant, occupy, occupation) of the people of Nattaranpota is ........................ (made, make, making) brassware. It is a .....................................(fascinated, fascinate, fascinating) process.

First the brass is...................................(melting. melted, melt) and the ......................................(melt, melting, melted) brass is poured into moulds. Then the craftsmen begin to carve designs.

It's wonderful to see the craftsmen working under a................................ (leading, leadership, lead).

The master crattsman trains the apprentices. The apprentices go on training until they become more familiar with the job.

The..................................(fine, final, finally) test of a good workman is to have the skill to make a.........................................(flawless, flow, flowing) brass lamp. Many.....................................(tour, tourists, tourism) visit this place to buy these items. The.......................................(villagers, village, villages) get a good ..................................(earn, earning, earner) from this.

**02) Read the following statements. They are mixed. Put them in correct order. One is done for you.**

1) He had an ambition to become an engineer and serve the country. ☐
2) Washington also was injured and left with brain damage. ☐
3) John Rowling was an American. [1]
4) Many experts said it was impossible. ☐
5) In 1883 he was inspired by the idea of building a bridge connecting New York with long Island. ☐
6) His son Washington came forward to help him. ☐
7) It was his dream and he wanted to fufil his wish. ☐
8) But a tragic accident at the site took the life of John. ☐
9) He didn't give up. ☐
10) The project started and went on well. ☐
11) Everyone felt that the project should be scrapped. But he completed the project with his wife's help. ☐

**03) This is the survey taken from schools. Look at the table and answer the questions.**

| Name of School | Volleyball | Football | Cricket | Kabadi |
|---|---|---|---|---|
| J/Hindu College | 40 30 | 60 | 20 | |
| J/Central College | 50 40 | 90 | 10 | |
| J/Kokuvil Hindu College | 60 30 | 70 | 30 | |
| J/Velanai Central College | 30 20 | 50 | 05 | |

1. Name the game most students like to play?

2. Which school students have less interesting in playing Kabadi?

3. In J/Kokuvil Hindu College how many students like to play volleyball?

4. How many schools and games have been taken into the study?

6. Name the less popular game?

**04) Read the poem and answer the questions.**

### Past and Present

I remember, I remember
The house where I was born,
The little window where the sun
Came peeping in at morn;
He never came a wink too soon
Nor brought too long a day;
But now, I often wish the night
Had borne my breath away.

I remember, I remember
The roses, red and white,
The violets, and lily-cups--
Those flowers made of light!
The lilacs where the robin built,
And where my brother set
The laburnum on his birthday,--
The tree is living yet!

I remember I remember
Where I was used to swing,
And thought the air must rush as fresh
To swallows on the wing;
My spirits flew on feathers then
That is so heavy now,
And summer pools could hardly cool
The fever on my brow

I remember I remember
The fir tree dark and high;
I used to think their slender tops
Were close against the sky:
It was a childish ignorance,
But now 'tis little joy
To know I am farther off from Heaven
Than when I was a boy.

**Thomas Hood.**

1. Write the name of the poet and the title of the poem?
...............................................................................................
2. According to him what is the kind of air he enjoyed as a young boy?
...............................................................................................
3. Describe the house of the poet in your own words?
...............................................................................................
4. What ore the flowers he remembers?
...............................................................................................
5. Find the rhyming words to the following.
I) white:...........................
II) high:............................

**05) You are the secretary of the Nature Club of your school. You have planned to conduct an awareness programme on " Save the Trees - Cut them not"**

Write a letter to the principal of your school asking for permission to conduct the above programme at school and use the main hall. Include the following.

1. Give date and time.
2. No. of students participating in the programme.
3. Name of the guest speaker who delivers the speech.
4. Any other items.

**06) A firm making and marketting leather bags wants to recruit management trainees in their branches.**

It asks you to write out an advertisement to be published in the newspaper. Include the following:-

1. Age
2. Educational and other qualifications needed.
3. Salary
4. Closing date
5. Address of the firm

**07) Read the follwing Passage and answer the questions given below.**

There were a donkey, a dog, a cat, and a rooster who were very old and were no longer useful to their masters. They were ill-treated by their masters. When the four met together, they decided to go to Bremen-a place famous for its freedom where animals could live without owners. May be they could become musicians since they could not work.

They could not reach Bremen in one day. They decided to spend the night under a big tree in the forest. Both the cat and the rooster could climb trees, so they decided to sleep on the tree. Neither the donkey nor the dog could climb trees, so they decied to sleep under the tree. The rooster flew to the top of the tree where he was safer and looked around before he went to sleep. In the distance, he saw a little spark burning. When he told his friends what he had seen, the four decided to go there in the hope of finding some food and shelter.

When they reached the place, they saw a house. They saw through a window that there were some men sitting at a table eating and drinking. There was both food and gold on the table. The animals planned to perform for the men in the hope of getting somefood. The donkey placed himself with his forefeet upon the window ledge. The dog jumped on the donkey's back. The cat climbed upon the dog, and the rooster flew up and perched on the cat's head.

At a given signal they began to perform together. The donkey brayed, the dog barked, the cat mewed, and the rooster crowed. The men who were robbers thought that it was a ghost. They were extremely frightened and ran away. The four companions found both food and shelter and were very happy.

1. Why did the friends decide to leave their masters?
...............................................................................................
2. What is Breman?
...............................................................................................
3. What made the robbers run away?
...............................................................................................
4. What does the word "himself" refer to?
...............................................................................................
5. Find similar words to the following.
1. Colleaques :............................
2. evil :............................


**08. Write on any one of the following. Use about 200 words.**

1. You are seeking for a job. You have been asked to select one of the following as your job. Journalist, tourguide, self employment
What would you choose? Give your points.
- say why the job is important to you.
- say what you would choose
- say why you choose it
- give your points.

2. You have been invited to deliver a speech on "Dengue Eradication"
Include the following
1. Why dengue has become a term to be spoken
2. The factors edcouraging the dengue.
3. Impact of dengue.
4. Ways to eradicate dengue.

3. Complete the story
Once I went to a jungle with my friends Ramu and Somu. ...................
...............................................................................................
My mother woke me up and asked me 'why you shouted "mummy save me"'
Then only, I realized that it was a dream.





மல்லாகம் புனித சதா சகாய மாதா ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெற்றன. திருப்பலிப் பூசையைத் தொடர்ந்து மாதாவின் திருச்சொரூப பவனியும் இடம்பெற்றது.

## சுற்றுலாத்துறைக்கு ஆப்பு அச்சுறுத்துகிறது டெங்கு

இலங்கை தற்போது சுற்றுலா மற்றும் வர்த்தகத்துக்கு பயங்கர மான நாடாக மாறியுள்ளது. இதற்கு அரசியல் பிரச்சினை மட்டும் காரணமல்ல. டெங்கு நோயின் பரவலும் காரணம் என்று சர்வ தேச செய்தி ஒன்று தெரிவிக் கிறது.

இலங்கையில் தற்போது 17ஆயிரம் பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் ... பேர் வரை பலியாகியுள்ளனர். இது தொடர்ந்தும் நீடிக்குமானால் சுற்றுலாத்துறையை டெங்கு நோய் தாக்கம் பாரியளவில் பாதிக்கும் என்று சர்வதேச செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் டெங்கு நோய் பரவல் தொடர்பில் அமெரிக்கா தமது பிரஜைகளுக்கு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அவுஸ்ரேலியாவும் டெங்கு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பிரித்தானியாவும் தமது பயண அறிவுறுத்தலில் இலங்கையில் டெங்கு நோய்த் தாக்கம் தொடர்பாக எச்சரிக்கையை விடுத் துள்ளது. இலங்கையில் தெஹிவளை, கல்கிஸ்ஸை, நீர் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, திரு கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் டெங்கு நோய் பரவல் ஏற்பட்டுள்ளது.

# நாட்டின் மீதான அவப்பெயரை நீக்க நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்க வேண்டும்

## மட்டு,திருமலை ஆயர்கள் கோரிக்கை

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவின் விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதன் மூலமே இலங்கையில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் கொண்டு வர முடியுமென இலங்கை ஆயர் சபை நம்புகிறது என்று திருகோணமலை மாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸிலி சுவாம்பிள்ளை, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆகியோர் தெரிவித்தனர்.


இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் தொடர்பிலும் அவ் விசாரணை தொடர்பில் உடன்பாடு கொள்ளாத இலங்கையின் நிலை குறித்தும் கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

இரு ஆயர்களும் மேலும் கருத்து வெளியிடுகையில் விசாரணைக்குழுவை வராமல் தடுப்பதன் மூலமோ அல்லது இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காமல் முரண்டு பிடிப்பதனாலோ எவ்வித நன்மையும் அடையப் போவதில்லை. நாட்டில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் கொண்டு வர வேண்டுமானால் ஆணைக்குழுவின் விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி நெகிழ்வுத் தன்மையாக நடந்து கொள்வதன் மூலமே நாட்டுக்கு வரக்கூடிய அவப் பெயரையும் கெடுதிகளையும் தடுக்க முடியும். இதையே இலங்கையிலுள்ள ஆயர் சபையினர் வேண்டுகோளாக விடுக்க விரும்புகிறோம்.

மேலும் கடந்த மே மாதம் 2 ஆம் திகதி ஆயர் சபையைச் சேர்ந்த 14 ஆயர்கள் ரோமிலுள்ள பாப்பரசரைச் சந்தித்த போது இலங்கையில் அமைதியும் சமாதானமும் கொண்டு வரப்பட வேண்டும். இனங்களுக் கிடையிலான புரிந்துணர்வு ஒப்புரவு நல்லிணக்கம் கொண்டு வரப்பட வேண்டுமானால் மன்னிப்பும் நெகிழ்வுத் தன்மையும் அடித்தளமாக இருக்க வேண்டுமென எங்களிடம் கூறினார்.

இலங்கையில் இன்று நிலவும் பிரச்சினைகளுக்கு விடிவு வரவேண்டுமென அவர் பிரார்த்தித்தார் எனக் குறிப்பிட்டனர்.

## கழிவு வாய்க்காலில் ஐயப்பன் ஆலயம் அருகில் சாராயக் கடை; ஆலய அமைவிடம் சரியா?




இந்து மக்களின் வாழ்க்கை யில ஆலயமும் ஆலய வழிபாடும் பிரிக்கமுடியாதவொன்று அவர்களின் பண்பாடுகள் கலாசாரங்கள்அனைத்தினதும் மையம் ஆலயமே அந்த ஆலயத்தை அமைக்க வேண்டிய விதிமுறை பற்றி ஆகமங்கள் சிறப்பாகக் கூறும். எமையாளும் ஆண்ட வனை எழுந்தருளியிருக்கும் அகமாகிய தாமசையும் புறமாகிய ஆலய அமைவிடமும் புனிதமாகவிருக்க வேண்டும். புனிதமாக பேணி வரவேண்டும் என்பது ஆகமவிதியாக இருந்து வருகிறது.

அதுமட்டுமின்றிக் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் ஆலயம் அமைக்கக்கூடாது என்பது ஆகம விதி. ஒரு வீட்டைக் கட்டும் இந்து அதன் அமைவிடத்தை வாஸ்த்து சாஸ்திரப்படி தேர்ந்தெடுக்கிறான் கடையொன்றைக்கட்டும்ஒருவன் அதன் அமைவிடம் வியாபார நிலைமை போன்ற விடயங்களைப் பார்த்து அமைக்கிறான்.

ஆனால் எமையாளும் இறைவன் எழுந்தருளி அருள் பாலிக்கும் இடமாகிய ஆலயத்தை அமைப்பதற்கு மட்டும், ஆகம விதியைப் புறந்தள்ளிவிட்டு வெறும்வருவாய்க்காக மட்டும் கண்டகண்ட இடங்களில் எல்லாம் ஆலயம் அமைக்கும் இந்துக்களின் மடமைத்தனம் தற்பொழுது எம் சமூகத்தவரிடையே காணப்படுவது மன வேதனையைத் தருகிறுது.

எமது சமயத்தை நிந்தை செய்வதாக அமைகிறது. எமது சமயம் பற்றி வேற்றுமதத்தவர் எள்ளிநகையாட இடமளிக்கிறது. இத்தகைய இழிநிலையினை எடுத்துக்காட்டும் விதத்தில் யாழ்ப்பாணம் –கே.கே.எஸ் வீதி தாவடிச்சந்திக்கு அருகாமையில் அமைக்கப்பட்டு வரும் ஐயப்பன் ஆலயம் காணப்படுகிறது.

அவ்விடத்தில் ஏற்கனவே சிறியளவில் இருந்த ஐயப்பன் ஆலயம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால், வீதி அகலிப்பிற்காக அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. பின் அது மறுபுறத்தில் வீதியோரம் சிறிதளவில் அமைக்கப்பட்டு வீதியில் நின்று அர்ச்சகர் பூசை செய்து வரும் அவல நிலையும்காணப்பட்டது.

இவ்வாலயம் தற்பொழுது வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொடுத்துள்ள பணத்தைக் கொண்டும் ஊர்மக்களின் பணத்தைக் கொண்டும், மழை காலத்தில் கழிவு நீர் வழிந்தோடும் வாய்க்காலிற்கு மேலாக சீமெந்துத் தரை இடப்பட்டு அமைக்கப்பட்டு வருகிறது.

இவ்வாலய அமைவிடத்திற்கு அருகில் சாராயக்கடையொன்றும் காணப்படுகிறது.

ஆகமம் கூறும் ஆலய அமைவிட விதிமுறைகளிற்கு எவ்விதத்திலும் பொருத்தமில்லாத ஓர் இடத்தில் ஐயப்பன் ஆலயம் அமைக்க வேண்டிய தேவை என்ன? இது விழிப்புணர்வு அ... இந்துக்களின் மடமைத்... னமா? அல்லது பிழைப்பூதியத்திற்கான அர்ச்சகரின் தவறான வழிகாட்டலா? தூண்டுதலா? எதுவாக இருப்பினும், இவ்விடயத்தில் ஆலயம் அமைப்பது தொடர்பில் இந்து அமைப்புக்களுடனும் அந்தணப் பெருமக்களுடனும் கலந்துரையாடிப் புனிதமான ஒரு இடத்தைத் தெரிவு செய்து ஆலயம் அமைக்க ஆவன செய்ய வேண்டியது அவ்வூர் இந்துமக்களின் தலையாய கடமையாகும்.

இதனைக் கருத்தில் கொள்ளாத ஆலயம் அமைக்கப்படுமாயின், அவ்வாலயத்தில் ஐயப்பன் வெறும் கற்சிலையாகவே காட்சியளிப்பாரேயோளிய அந்தக் கற் சிலையில் ஐயபமூர்த்தி எழுந்த ருளப் போவது மில்லை. தெய்வ சாதித்தியம் ஏற்படப் போவது மில்லை பக்தர்களிற்கு அருள் கிடைக்கப் போவது மில்லை தினம்தினம் வெறும் கருங்கல் சிலையினையும் கட்டடத்தினையும் கண்டு வழிபாடு செய்யப் போகின்றனர்.

அவ்வாலயத்தில்போலியயான சடங்குகள் சம்பிரதாயங் கள் மட்டுமே இடம் பெறப் போகிறது. காரணம், இறைவன் புனிதமற்ற எந்தவிடத்திலும் தன்னை எழுந்தருளச் செய்வதுமில்லை, புனிதமற்ற எந்தப் பக்தனுக்கும் அருள்பாளிபபது மில்லை இறை கோட்பாடு, இறை வழிபாடுபற்றிய இந்துக்களது இந்தக்கோட்பாட்டை, விதிமுறைகளை விளக்காது அமைக் கப்பட்டு வரும் எந்த ஆலயத்தினாலும் அடியவர்களிற்கு எந்தப் பலனுமில்லை யென்பதைப் புரிநது கொள்ள வேண்டும்:

எனவே கழிவு நீர் ஓடும் வாய்க்காலினுள்ளும் சாராயக் கடையின் முன்பாகவும் ஐயப்பனுக்கு ஆலயம் அமைவதை நிறுத்தி வேறு பொருத்தமான புனிதமான ஒரு இடத்தைத் தெரிவு செய்து ஐயப்பனுக்கு ஆலயம் அமைத்து அவனது அருளைப் பெற அவ்வூர் இந்துக்கள் அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

**இணைப்பாளர்**
**இந்து சம்மேளனம்**
**உடுவில் பிரதேசம்**



அண்மையில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற கொடிகாமம் முன்பள்ளிக் குடும்பங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் முன்பள்ளிக் குடும்பங்களுக்கான பரிசுப் பொருட்களை பொறுப்பாசிரியரிடம் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த.இரவீந்திரன் வழங்குவதைக் காணலாம்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................................

முகவரி :- ..............................................

பிறந்த ஆண்டு :- ..............................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# இந்தியாவை கைப்பற்றுவதற்கு திட்டம் வகுக்கிறது ஐ.எஸ்.ஐ.எஸ்.



(பாக்தாத்)

ஈராக் முழுவதையும், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின், இந்தியாவைக்கைப் பற்றும், ஐ.எஸ்.ஐ.எஸ்.,சின், ஐந்தாண்டு சதித்திட்டம் வெளியானதால், பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்காசிய நாடுகளில் ஒன்றான ஈராக்கில், 25 ஆண்டுகளுக்கும் மேலாக, அதிபராக இருந்த சதாம் ஹுசைன், 2006 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்ட பிறகு, அந்நாட்டில் மக்களாட்சி மலர்ந்து, ஜலால் தலாபானி அதிபராகவும், நூரி அல் மாலிக் பிரதமராகவும் பதவியேற்றனர்.கடந்த 2002ஆம் ஆண்டு முதல், அந்நாட்டில் பயங்கரவாத தாக்குதல்களும், உள்நாட்டு கலவரங்களும் நடைபெற்று வருகின்றன. சன்னி முஸ்லிம் பிரிவை சேர்ந்த, சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களான, "இஸ்லாமிக் ஸ்டேட் இன் ஈராக் அண்ட் அல்ஷாம் - ஐ.எஸ்.ஐ.எஸ்.," அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள், வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்களின் உதவியுடன் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், "டுவிட்டர் சமூக வலைத்தளப் பக்கத்தில், ஐ.எஸ்.ஐ.எஸ்., அமைப்பை சேர்ந்த, அய்மன் மொகைல்தின் என்பவர், ஒரு வரைபடம் மற்றும் திட்டத்தை வெளியிட்டுள்ளார்.இந்த வரைபடத்தில், ஈராக் மட்டுமல்லாமல், ஆபிரிக்க நாட்டின் ஒரு பகுதி, இஸ்ரேல் உள்ளிட்ட அனைத்து மத்திய கிழக்கு நாடுகள், துருக்கி, இந்தியா, வங்கதேசம் மற்றும் இந்தோனேஷிய நாடுகள், கறுப்பு வண்ணத்தில் காட்டப்பட்டுள்ளன. மேலும் மியான்மார் மற்றும் அவுஸ்ரேலிய நாடுகளும், இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன.கறுப்பு வண்ணமிட்ட பகுதிகளை கைப்பற்ற திட்டமிட்டுள்ளதாக, பயங்கரவாத அமைப்பு குறிப்பிட்டுள்ளது.மேலும், ஈராக் முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின், அடுத்த ஐந்தாண்டுகளில், இந்தியாவைக் கைப்பற்றுவதற்கான திட்டங்கள் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும், சன்னி முஸ்லிம்களின் ஆட்சியை கொண்டு வருவதே, இந்தப் பயங்கரவாத அமைப்பின் திட்டமாகவுள்ளது.

# தி.மு.க.வில் தவறு செய்தவர்கள் தண்டனை அனுபவிக்கவேண்டும்

## கருணாநிதி தெரிவிப்பு

தமிழகத்தில் நடந்து முடிந்த தேர்தலில் தி.மு.கவுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் தண்டனை அனுபவித்தே தீர வேண்டும் என அக்கட்சியின் தலைவர் கருணாநிதி எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கைகுறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தி.மு.க வில் சிறு புகை மூட்டம் என்றாலும் அதனைப் பெரிதாக்கி, மிகப்பெரிய விபத்து ஏற்பட்டு விட்டதைப்போல சில பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன. மக்களவைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைப் போல பலமுறை தி.மு.க. தோல்வியைத் தழுவியிருக்கிறது.


ஆனால், அதற்கு பிறகு தி.மு.க. வீறுகொண்டு எழுந்துள்ளது. தேர்தல் வெற்றி, தோல்விகள் எல்லாம் பகல் இரவு போல மாறி மாறி வரத்தான் செய்யும். தற்போது மத்தியில் ஆட்சியைப் பிடித்துள்ள பா.ஜ.க. தோல்வியைக் கண்டதில்லையா? இந்த வெற்றி, தோல்விகள் என்பதே இயக்கத்தின் ஆயுளை நிர்ணயிக்கக் கூடியது அல்ல.

ஆனாலும், நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் ஒரு சில இடங்களில் தி.மு.க.வினர் சரியாகப் பணியாற்றவில்லை. மாவட்ட செயலாளர்களும், கட்சி முன்னணியினரும் தவறு செய்தார்கள். அ.தி.மு.கவினரிடம் பணம் பெற்றுக் கொண்டு ஒதுங்கியிருந்தார்கள் என்று நான் கேள்விப்பட்டேன்.

தேர்தல்கள் மட்டும் தி.மு.கவின் வரலாறு அல்ல. வெற்றி கண்டு வெறிகொண்டு அலையவும் மாட்டோம். தோல்வி கண்டு துவண்டு விடவும் மாட்டோம். தாற்காலிக நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் தவிர மற்றவர்கள் மீது இப்போது நடவடிக்கை எடுக்காமல் இருக்கலாம். உப்பைத் தின்றால் தண்ணீர் குடித்துத்தான் ஆக வேண்டும். தவறு செய்தவர்கள் தண்டனை அனுபவித்தே தீர வேண்டும் என்றார்.

# ஏவுகணை சோதனையில் வடகொரியா வெற்றி

(பியாங்யாங்)




அதிநவீன, துல்லியமான, வழிகாட்டு ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடாத்தியதாக, வட கொரியா நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. நீண்ட தூரம் சென்று தாக்கும் திறன் படைத்த இந்த ஏவுகணைச் சோதனை, அதிபர், கிம் ஜோங் - உன் மேற்பார்வையில் நடைபெற்றதாக, அந்நாடு அறிவித்துள்ளது.

எனினும் இதை, வடகொரியாவின் அண்டை நாடும், சண்டை நாடுமான, தென்கொரியா மறுத்துள்ளது. சாதாரண ஏவுகணையை தான், வழிகாட்டும் ஏவுகணை என, வடகொரியா, "புலுடா" விடுகிறது எனத் தென்கொரியா தெரிவித்துள்ளது. வழிகாட்டும் ஏவுகணை என்பது, சாதாரண ஏவுகணை போல் இல்லாமல், எதிரி ஏவுகணை அல்லது இலக்கு வெளிப்படுத்தும் சிக்னல்களை எதிர்கொண்டு சென்று தாக்கும்திறன் படைத்தது.

# இந்தியா சீனாவிற்கிடையிலான ஒற்றுமை பலமடையவேண்டும்

## குடியரசுத் துணைத்தலைவர் தெரிவிப்பு



இந்தியாவும், சீனாவும் தங்களிடையேயான கருத்து வேறுபாடுகளைக் களைந்து விட்டு, பஞ்ச சீலக் கொள்கையைப் பின்பற்றி ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் ஹமீத் அன்சாரி வலியுறுத்தியுள்ளார்.

பஞ்ச சீலக் கொள்கை உருவாக்கப்பட்டு 60ஆண்டுகள் ஆவதைக் குறிக்கும் வகையில், சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து தெரிவிக்கையில்,

முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு இந்தியாவும், சீனாவும் தங்களுக்கு இடையே ஒற்றுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இருநாடுகளும் தங்களிடையேயான கருத்து வேறுபாடுகளைக் களைய வேண்டும்.

பஞ்சசீலக் கொள்கை, இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு உதவும். மேலும், இரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த புதுமையான முயற்சிகளை மேற்கொள்வதற்கும் பஞ்ச சீலக் கொள்கை உதவும்.

இந்தியா, சீனா, மியான்மர் ஆகிய நாடுகள், நிலவியல் மற்றும் பல்வேறு பழங்காலத் தொடர்புகளால் ஒன்றுபட்டுள்ளன. வளர்ச்சி விவகாரத்தில் 3 நாடுகளும் வெவ்வேறு கட்டங்களில் உள்ளன. எனினும் இந்த விவகாரத்தில் நமது நாடுகள் ஒவ்வொன்றும், பரஸ்பரம் பிற நாட்டின் அனுபவங்களில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

உலகளாவிய செயற்பாட்டுக்கு நமது நாடுகளுக்கு புதிய அடையாளம் தேவைப்படுகிறது. இந்தியாவும், சீனாவும் தொன்மையான கலாசாரம் கொண்ட நாடுகளாகவும், அண்டை நாடுகளாகவும் மட்டும் திகழவில்லை. இருநாடுகளும் பிராந்திய கூட்டாளியாகவும் உள்ளன என்று அன்சாரி தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

**சிங்கள....**

அவரை நான் சந்தித்தது ஜுலை 83 கலவரங்கள் நடந்து முடிந்த இரண்டு வருடங்களின் பின்னர். அவரது அனுபவத்திலிருந்து அவர் கற்றுக்கொண்ட பிரதான பாடம் என்ன என்று அவரிடம் நான் கேட்டேன். அவரது பதிலை அப்போது இருந்த லங்கா கார்டியனில் நான் பதிவு செய்திருந்தேன்.

இடது செய்த மிகப் பெருந் தவறு, தேசியவாதம், பேரினவாதம், மற்றும் பாசிசம் என்பவைகளை போட்டுக் குழப்பியதுதான் என்று அவர் சொன்னார். "பாசிசத்துக்கு எதிராகப் போராட நாங்கள் தேசியவாதத்துடன் பேரினவாதத்தைக் கூட இணைக்க வேண்டும், மாறாக அவை அனைத்தையும் நாங்கள் ஒன்றாகவே பரிஸ்கரித்தோம்".

1920 மற்றும் 1930 களில் உள்ள ஐரோப்பிய தேசியவாதத்தை போன்றதே சிங்கள மற்றும் சிங்கள பௌத்த தேசியவாதமும். சிங்கள பௌத்தம் மிகவும் பழமையானதால், ஆழ வேரூன்றி, பரந்ததும் கரிமத் தன்மையானதுமாக உள்ளதால் நேரடியாக மோதலை ஏற்படுத்தி உடைந்து போகிறது.

மாறாக அது வெளிப்புறமாக எதிரீடு செய்ய உதவுவதாகவும் மற்றும் அதன் நெகிழவுத் தன்மை அங்கீகரிக்கப்படத் தக்கதாகவும் இருப்பதோடு, உட்புறமாக, நியாயமாகவும் மற்றும் உடனடியாகவும் பல்லினம், பல் சமயம், பன்மொழி, மற்றும் பல்கலாசார தன்மைகளை, அதாவது பன்மைத் தன்மையை ஏற்றுக்கொள்ள தக்க வகையில் மறுவேலை, மறு திருத்தம், மறு அமைப்பு மற்றும் மறு பொருத்தல் என்பவைகளை செய்துகொள்ள வேண்டும்.

சிங்கள பாசிசத்துக்கு எதிரான போராட்டம், தேசிய அரசியல் பிரதான நீரோட்டத்திலிருந்து அதனால் நடாத்தப்பட வேண்டும், மற்றும் அதன் அதிர்வலைகள் அதற்கு உள்ளிருந்தே வரவேண்டும். சிங்கள பௌத்தம் மற்றும் சிங்கள தேசியவாதம் போன்றவைகளுடன் நேரடியாக மோதுவதால் சிங்கள பாசிசத்தை தோற்கடிக்க முடியாது.

அல்லது தேசிய - ஜனநாயக மூலோபாயம் மூலம் ஐக்கிய இலங்கை தேசம் மற்றும் அரசாங்கம் என்பனவற்றை கட்டியெழுப்பி வெளித் தலையீடுகள் மற்றும் தமிழ் பிரிவினைவாதம் என்பனவற்றை எதிர்ப்பதன் மூலம் வெளியிலிருந்தும் அதனைத் தோற்கடிக்க முடியலாம். இதன் கருத்து தேசப்பற்றுள்ள ஜனரஞ்சகமான ஜனநாயக மேடை அவசியம் என்பதாகும். ஆனால் ஜனரஞ்சகம் மற்றும் தேசியவாதம் என்பவைகளின் ஒரு தத்தெடுப்பும் தேவைப்படலாம்.

தீவிர இடதுசாரி பைத்தியங்களுக்கு துணை போகும் சாயம்போன போலி அறிவாளிகளைப போல அல்லது பொது நேரக்கத்தை வேரோடு பிடுங்கி எறிந்துவிட்ட சிவில் சமூகக் குழுக்களைப் போல காட்டிக் கொள்வதற்கு இது நேரமல்ல. இதில் ஏற்படும் தோல்விக்கான விலைதான் இறுதியானதாக இருக்கும்.

# நைஜீரியாவில் குண்டுவெடிப்பு 10பேர் பலி; 14பேர் காயம்



(கனோ)

நைஜீரியாவில் போகோ ஹாரம் தீவிரவாதிகளின் அட்டூழியம் அதிகரித்துள்ளது, பள்ளி மாணவிகள் கடத்தல் மற்றும் குண்டு வைத்து பொதுமக்களை கொன்று குவிப்பது போன்ற கொடூரச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் வடக்கு நைஜீரியாவில் சிவப்பு விளக்கு பகுதி உள்ளது. அங்குள்ள பாயுசி சிட்டி விபசார விடுதிகள் உள்ளன.

அங்குள்ள விபசார விடுதியில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. அதில் 10 பேர் பலியாகினர். 14 பேர் காயம் அடைந்தனர். இச்சம்பவத்துக்கு போகோ ஹாரம் தீவிர வாதிகள்பொறுப் பேற்றுள்ளனர்.

நைஜீரியாவை இஸ்லாமிய நாடாக அறிவிக்க வலியுறுத்தி கடந்த 5ஆண்டுகளாக இவர்கள் தீவிரவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# யாழ்.நகர மீன் சந்தைகளில் இறாலின் விலை அதிகரிப்பு



யாழ்ப்பாணத்தின் கடல்கள் மற்றும் கடல்நீர் ஏரிகளில் இறால்கள் பிடிக்கப்படுவது குறைவாகக் காணப்படுவதால் இறால்களின் விலைகள் 200 ரூபாவால் அதிகரித்துக் காணப்படுவதாக மீன் ஏலம் கூறுபவர்கள் தெரிவித்தனர்.

மீனவர்களுக்கு இறால் படுகை வெகுவாகக் குறைந்து காணப்படுவதினால் காக்கைதீவு, பண்ணை, சின்னக்கடை, நாவாந்துறை உள்ளிட்ட முக்கிய சந்தைகளில் இறால் வரத்துக்கள் குறைந்து காணப்படுகின்றன.

இதனால், முன்னர் 500 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த சிவப்பு இறால் தற்போது 700 ரூபாவாகவும், முன்னர் 800 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த கறுப்பு இறால் 1000 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாகவும் இதனைவிட குறுனி இறால் கூட கிலோ 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இனிவரும் மாதங்களில் வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, அவர்கள் இறால், நண்டு மற்றும் கணவாய் போன்றவற்றை அதிகமாக நாடுவதினால் இறாலின் விலைகள் இன்னமும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்தனர்.

அதேவேளை, ஒரு கிலோ கணவாய் 500 தொடக்கம் 600 ரூபா வரையிலும், ஒரு கிலோ நண்டு 400 ரூபாவிலிருந்து 450 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## மாங்குளம் பொதுச்சந்தைக்கு புதிய கட்டடம் நிர்மாணம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட மாங்குளம் பொதுச் சந்தைக்கான புதிய கட்டடத்தொகுதி வேலைகள் இம்மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அப்பிரதேச சபைச் செயலாளர் எஸ்.மிதிலைநாதன் தெரிவித்தார்.

நெல்சிப் திட்டத்தின் கீழ், 55 மில்லியன் ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறின்ார்.

இச்சந்தையானது 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தால் முற்றாக அழிவடைந்தது.

இந்நிலையில், 2000ஆம் ஆண்டு இச்சந்தைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு, சந்தை நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. எனினும், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது மீண்டும் இச்சந்தைக் கட்டடம் அழிவடைந்ததாகவும் அவர் கூறினார்.

2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மாங்குளம் பகுதியில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், சந்தை நடவடிக்கைக்கு கட்டடம் இல்லாமையால் இச்சந்தை இயங்காதிருந்தது.

தங்களுடைய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக சந்தை அமைத்துத் தருமாறு உள்ளூர் உற்பத்தியாளர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் அவர் கூறினார்.

கட்டடம் அமைக்கும் பணிகள் இவ்வருட இறுதிக்குள் முடிவடைந்து, சந்தை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென்று எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும தெரிவித்தார்.

## பௌத்த பிக்கு மீது தாக்குதல் பெண்கள் உட்பட 28 பேர் கைது

பௌத்த பிக்குவை தாக்கிய பெண்கள் உள்ளிட்ட 28 பேரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பன்வில ஹாதலை பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முனசிங்காராம விகாரையின் விகாராதிபதியை பிரதேச மக்[கள்] இணைந்து தாக்கியுள்ள[ன]ர்.

பிரதேச மக்களுக்கும் விகாராதிபதிக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த பிக்குவைத் தாக்கிய சந்தேகத்தின் பேரில் 14 பெண்களும், 13 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் 17 வயது சிறுவன் ஒருவரையும் பொலிஸார் கைது செய்து, சிறுவர் காப்பகமொன்றில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர்களை எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான விகாராதிபதி கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.





மல்லாகம் புனித சதா சகாய மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை 7.00 மணி முதல் இடம்பெற்றன. மறைக்கல்வி நடு நிலையத்தின் அதிபர் அருட்தந்தை எம்.சௌந்தரநாயகம் தலைமையில் இடம்பெற்ற விசேட திருப்பலிப் பூசையைத் தொடர்ந்து, மாதாவின் திருச்சொரூவப் பவனியும் இடம்பெற்றது. திருப்பலிப் பூசையில் மல்லாகம் பங்குத் தந்தை அருட்திரு றெக்ஸ் சவுந்தரம், அருட்தந்தை ஜெயசீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## அளுத்கம...

க்குழுவொன்றின் மூலமே உண்மை நிலை அறிய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழுவில் மூவினங்களையும் சேர்ந்த, துறைசார் அனுபவம் கொண்டவர்கள் இருக்க வேண்டும்.

ஏற்கனவே நடைபெற்ற பொலிஸ் விசாரணைகளின் போது உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட முஸ்லிம்களினால் தமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் பி.பி.சி. தமிழோசைக்கு தெரிவித்தார்.

## இலங்கை....

கடந்தவாரம், இந்த விசாரணைகளுக்கு உதவும் நோக்கில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை மூன்று நிபுணர்களை நியமித்திருந்தார்.

அத்துடன், ஐ.நா. விசாரணைக்குழு தமது விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாகவும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் பேச்சாளர் ருபேட் கொல்வில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு...

றம் சாட்டியுள்ளார்.

மத தீவிரவாதம், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வுக்கு உலகளவில் ஒரு அச்சுறுத்தலாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டிலுள்ள ஆட்சியைக் கலைத்து, இது போன்ற பிரச்சினைகளை எளிதில் தீர்வுகாண முடியும் எனவும், நல்லிணக்கத்தின் அடிப்படையில் இந்தப் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் மக்கள் பலர் ஒன்று சேர்ந்து வாழ விரும்பினாலும், பலர் தீவிரவாதத்தை வளர்ப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

மதப் பிரச்சினைகளை உருவாக்குவதால் அரசை நீக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானியருக்கு...

ளது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான முதல் சந்திப்பின் போதே, இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடியிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் இதுபற்றி விசாரணை நடத்தியதாக நம்பப்படுகிறது.

அந்த விசாரணைகளின் முடிவிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் ரைம்ஸ் ஒவ் இந்தியா தெரிவித்துள்ளது.

## ஐ.நா.விசாரணைக் குழுவிற்கு நேரடியாக பங்களிக்க முடியாது

### இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

இலங்கை மீது நடத்தப்படவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணைகளுக்கு நேரடியாக பங்களிப்புச் செய்வது சாத்தியமில்லை என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

போர்க்காலத்தில் நடந்துள்ளதாகக் கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தவுள்ள வல்லுநர் குழுவை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அண்மையில் அறிவித்திருந்தது.

இந்த விசாரணைகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பங்களிப்பு வழங்குமா என்று மனித உரிமைகள் ஆணையாளர் பிரதிபா மஹநாமஹேவாவிடம் தமிழோசை வினவியது.

எங்களால் நேரடி பங்களிப்பைச் செய்யக்கூடிய நிலைமை இல்லை. நாங்கள் தேசிய மட்டத்தில் தான் பணியாற்ற முடியும். எனவே எங்களின் நேரடி பங்களிப்பு இந்த விடயத்தில் இருக்கும் என்று தெரியவில்லை என்றார் மனித உரிமைகள் ஆணையாளர்.

ஐ.நா.வால் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரிகள் இலங்கைக்கு வெளியில் இருந்து கொண்டு தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் இலங்கையிலுள்ள மக்களிடம் தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்பு அங்கிருக்கிறதா என்ற கேள்விக்கு 20 பேர் அல்லது 20 அமைப்புகள் சாட்சியமளிக்க முன்வந்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்ததை நாங்கள் அவதானித்துள்ளோம்.

தேசிய மட்டத்தில் இவர்களிடமிருந்து தகவல்களை பெறுவது எந்தளவுக்கு சாத்தியப்படும். முறையான விசாரணை ஒன்று நடக்குமானால், இலங்கையில் உள்ள சட்டதிட்டங்களுக்கு அமைவாகத் தான் பணியாற்ற முடியும் என்றார்.

இதனிடையே, தென்னிலங்கையில் அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் நடந்த வன்முறைகள் தொடர்பில் தனியான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறுகின்றது.

## கொழும்பில் சூடு இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு கிராண்பாஸ் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் காயமடைந்த நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவத்தில்,

இருவர் உயிரிழந்துள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

ஏனைய இருவர் இக்கட்டான நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## காணி உரிமையாளர் அசமந்தம் வீட்டின் மீது வீழ்ந்தது பனை



(ஏழாலை)


ஏழாலை தெற்கு சிவகுரு வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது நேற்றுப் பிற்பகல் பனை மரம் முறிந்து வீழ்ந்ததில் குடியிருப்பாளர் ஒருவரின் வீடு சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தினால் வீட்டில் இருந்தவர்களுக்கு எவ்வித ஆபத்துக்களும் ஏற்படவில்லையென கிராம அலுவலர் குறிப்பிட்டார்.

பக்கத்து வளவில் சாய்ந்த நிலையில் நின்றிருந்த மேற்படி பனை மரத்தினால் தங்கள் வீட்டிற்குப் பாதிப்புள்ளதாகச் சேதமடைந்த வீட்டின் உரிமையாளர் ஏற்கனவே தனக்குத் தெரிவித்திருந்ததினையடுத்து, குறித்த பனை மரத்தினைத் தறிக்கும்படி பக்கத்து வளவு உரிமையாளரிடம் எட்டு மாதங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்ததாக கிராம அலுவலர் குறிப்பிட்டார்.

எனினும், வளவு உரிமையாளர் குறித்த பனை மரத்தினைத் தறிக்காத நிலையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக அவர் கூறினார்.

# இலங்கை - சீஷெல் இடையே 5 உடன்படிக்கைகள் கைச்சாத்து



(கொழும்பு)

இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயமாக சீஷெல் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந்நாட்டுடன் ஐந்து உடனபடிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளார்.

அரசியல் ஆலோசனை, சுற்றுலாத்துறை, கலாசார ஒத்துழைப்பு, மின்சாரத்துறை, தொழில்நுட்பம், முதலீட்டு ஊக்குவிப்பு போன்ற பல்வேறு துறைகளில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதேவேளை சீஷெல்சிற்கான இலங்கைத் தூதரகம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக சீஷெல்சில் இலங்கை வங்கி, மிஹின் லங்கா மற்றும் காப்புறுதி நிறுவனமொன்று ஆகியவற்றின் கிளைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் ஒன்றிணைந்த ஆணைக்குழு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

# உலகக்கிண்ண கால்பந்து

## காலிறுதியில் நெதர்லாந்து

பிரேசிலில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் நேற்று நடந்த போட்டியில் 2:1 என்ற கோல்கள் அடிப்படையில் மெக்சிக்கோவை வீழ்த்தியது நெதர்லாந்து. இதன் மூலம் காலிறுதிக்கு நெதர்லாந்து தகுதிபெற்றது.

# பாதுகாப்பை உறுதிப்படுத்த விரிவுரைகள் இடைநிறுத்தம்

பாதுகாப்பு உறுதிப்படுத்தும் வரை கல்வி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை இன்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக ரஜரட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பல்கலையில் சமீப காலத்தில் இடம்பெற்ற சில அசம்பாவிதங்கள் காரணமாகவே இத்தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக பல்கலை விரிவுரையாளர்கள் சங்க செயலாளர் ஒலகன்வத்த சந்திரசிறி தேரர் குறிப்பிட்டுள்ளார்.

ரஜரட்ட பல்கலை இன்று மீண்டும் கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்படவிருந்த நிலையிலேயே விரிவுரையாளர் சங்கம் இவ் அறிவிப்பை விடுத்துள்ளது. பல்கலையில் நிலவிய பதற்றமான நிலைமையையடுத்து கடந்த 27 ஆம் திகதி முதல் ரஜரட்ட பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை பணிப்பெண் குவைத்தில் நகை திருட்டு

குவைத்தில் இலங்கைப் பணிப்பெண்ணொருவர், தான் வேலை செய்த வீட்டில் நகை திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

1400 குவைத் தினார் பெறுமதியான நகையைத் திருடியதாகவே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

25 வயதான குவைத் பெண் இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பணிப்பெண், நாடடுக்குச் செல்வதற்காக விமான நிலையத்தில் இறக்கி விட்டு, வீட்டிற்கு திரும்ப வந்து பார்த்தபோது நகை காணாமற்போனதை தான் அறிந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். குவைத் ஊடகமொன்று இதனை வெளியிட்டுள்ளது.

# அரிசி விலையை கண்காணிக்க மாவட்ட ரீதியில் குழுக்கள்

(கொழும்பு)

நிர்ணய விலையை விட கூடுதலான விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்புக்களை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மாவட்ட ரீதியில் சுற்றிவளைப்புக் குழுக்களை நியமித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக நிர்ணய விலையை விட கூடுதல் விலைக்கு அரிசி விற்பனை செய்த 400 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

சந்தையில் அரிசி விலை அதிகரிப்பை கட்டுப்படுத்தும் நோக்கில் அரிசிக்கான நிர்ணய விலைகளை அரசாங்கம் வெளியிட்டிருந்தது.

இதற்கமைய ஒரு கிலோகிராம் சம்பா அரிசியின் நிர்ணய விலையாக 77 ரூபாவும், வெள்ளை நாட்டரிசிக்கான நிர்ணய விலையாக 66 ரூபாவும் அறிவிக்கப்பட்டது.

வெள்ளைப் பச்சை அரிசி மற்றும் சிவப்பு நாட்டரிசி ஆகியவற்றுக்கான நிர்ணய விலை 66 ரூபாவாகும்,

ஒரு கிலோகிராம் சிவப்பு பசசை அரிசியின் நிர்ணய விலை 60 ரூபாவெனவும் நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த நிர்ணய விலையை மீறி கூடுதல் விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# சிறுவர் துஷ்பிரயோகத்துடன் வெளிநாட்டவர்க்கும் தொடர்பு

## தடுக்க வருகிறது விசேட செயற்றிட்டம்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய வெளிநாட்டவர்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் விசேட செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாடுகளுடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அதிகார சபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த செயற்றிட்டம் காரணமாக அண்மையில் சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடைய வெளிநாட்டவர்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதை தடுப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

இணையத்தளம் உள்ளிட்ட பல்வேறு வழிகளை பயன்படுத்தி சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு தூண்டப்படுகின்றமை தொடர்பிலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தகவல் கிடைத்துள்ளது.

இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபடுவோரிடமிருந்து பிள்ளைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உள்ளதாக அதிகார சபையின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அளுத்கம, பேருவளை சம்பவம் 80 பேர் பொலிஸாரால் கைது

அளுத்கம, பேருவளை உள்ளிட்ட பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக இதுவரை 80 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 55 பேர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டவர்களில் 40 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சி.சி.ரிவி கமராக் காட்சிகள் மற்றும் கிடைத்த தகவல்களுக்கு அமைய குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அளுத்கம, பேருவளை உள்ளிட்ட பகுதிகளில் வீடுகளையும் கட்டடங்களையும் சேதப்படுத்திய நபர்களை கைது செய்வதற்கான விசாரணை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் குழந்தைவேலு

**(இளைப்பாறிய இ.போ.ச சாரதி)**

சாவகச்சேரி, கல்வயல் 1 ஆம் கட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் குழந்தைவேலு அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் அமரர்களான வல்லிபுரம் - ஆச்சிமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், அமரர்களான சின்னையா - சேதுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், வனசராணியின் அன்புக் கணவரும், தெய்வேந்திரம், தருமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சி.பாலசுப்பிரமணியம், சி.இராமச்சந்திரன், தெ.தையல்நாயகி, த.ருக்மணிதேவி, இ.சுசீலா, வே.சுகுணா ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி வித்தியா கௌரீஸ்வரனின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (30.06.2014) காலை 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**இ.இராஜகுமார்**
**(பெறாமகன்)**

**1 ஆம் கட்டை,**
**கல்வயல்**

(இ)

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவராக

# நான்காவது தடவையாகவும் வைத்தியர் அனுருத்த தெரிவு

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக வைத்தியர் அனுருத்த பாதினிய நான்காவது தடவையாக சுமார் 95 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை பல்வேறு சர்ச்சைகளுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் கொழும்பு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் 88 ஆவது பொதுத்தேர்தல் மற்றும் பொதுக் கூட்டம் என்பன நடைபெற்றன. நாடு முழுவதிலும் இருந்து சுமார் 2700 வைத்தியர்கள் வாக்களிப்பில் பங்குபற்றி இருந்தனர்.

தலைவர் பதவிக்கு போட்டியிட்ட விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அனுருத்த பாதினிய 2660 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார். அவரை எதிர்த்து போட்டியிட்ட வைத்தியர் நிரோஷன் பிரேமரத்னவால் 138 வாக்குகளையே பெற முடிந்தது.



செயலாளர் பதவிக்கு போட்டியிட்ட வைத்தியர் லசந்த ஜினதாச 2574 வாக்குகளை பெற்றுக் கொள்ள அவரை எதிர்த்து போட்டியிட்ட வைத்தியர் ருசிர சரணபால 143 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.

பொருளாளர் பதவிக்கு போட்டியிட்ட வைத்தியர் நாத் விஜேய சூரிய 2574 வாக்குகளை பெற்றுக்கொண்டு பொருளாளராக அவரை எதிர்த்து போட்டியிட்ட வைத்தியர் குமாரசுவாமி திருமாவளவன் 208 வாக்குகளைப் பெற்று தோல்வி அடைந்தார்.

மேற்படி தேர்தலில் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அனுருத்த பாதினியவின் தலைமையில் தேர்தலில் போட்டியிட்ட அனைவரும் சுமார் 95 வீத வாக்குகளை பெற்றுக்கொண்டு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

மேலும் உபசெயலாளர்களாக வைத்தியர் நளின் ஆரியரத்ன, வைத்தியர் நவீன் டி சொய்சா, வைத்தியர் காஞ்சன புலன்குலம் மற்றும் வைத்தியர் நலிந்த ஹேரத் ஆகியோரும் பத்திராதிபராக வைத்தியர் பாலகிருஷ்ணன் சாயி நிரஞ்சனும், உப பத்திராதிபராக வைத்தியர் சமந்த ஆனந்தவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மத்திய குழுவிற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வைத்தியர் அழகையா லதாகரனும் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கோபாலமூர்த்தி ரஜீவ் ஆகியோரும் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

உப தலைவர் பதவிக்குரிய தேர்தல் நீதிமன்ற உத்தரவு காரணமாக நடைபெறவில்லை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.